# மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 27 ★ 3-11-57 சென்னை ★ விலை 16 காசு


# தென்னாட்டின் திருமுகம்!

——(0)——

## தவறைத் திருத்தக் கடைசி வாய்ப்பு

——(0)——

## பண்டித நேரு பயன் பெறுவாரா?

——(0)——

இந்தி புகுத்தப்படுவதைத் தென்னாடு எதிர்க்கிறது!

இந்தி புகுத்தப்படுவதைத் தென்னாடு முழுவதும் எதிர்க்கிறது!

இந்தி புகுத்தப்படுவதை தென்னாடு முழுவதும் முழு மூச்சுடன் எதிர்க்கிறது!

டில்லிப் பட்டணத்தில் அரசியல் ஏகாதிபத்தியத்துக்கு ஆதரவாக, ஒரு மொழி ஏகாதிபத்தியம் உருவாகி வருவதை நீண்ட காலமாக திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டி வந்திருக்கிறது! இந்தியல்லாத மற்ற மொழிகளையும், குறிப்பாகத் தென்னாட்டுத் திராவிடக் குழு மொழிகளையும் அடக்கியாளும் நோக்கத்தில், தன் எல்லா பலத்தையும் இந்தி ஏகாதிபத்தியம் சேகரித்து வருவதை நாட்டு மக்களுக்கு நாம் எடுத்துக் காட்டினோம்! நேரிடையாகவும், மறைமுகமாகவும், அரசாங்க ஆதரவிலும், தனிப்பட்ட முறையிலும், சூதுவாதுகளால், சூழ்ச்சித் திட்டங்களால், அதிகார பலத்தால், ஆதிக்க வலுவால், இந்தி ஏகாதிபத்தியம் தென்னாட்டை வளைத்து வருவதை விளக்கிக் காட்டினோம்! அரசாங்க மொழியாக, ஆதிக்கமொழியாக, இந்தி வருமேயாயின் எதிர்த்து நின்றிட திராவிட முன்னேற்றக் கழகம் தயாராக உள்ளது என்பதை திருவண்ணாமலை மாநாட்டில் தெரியப்படுத்தினோம்!

இன்று இந்தி வருவது ஒரு மொழிப் பிரச்சினையாகவோ, ஒரு அரசியல் பிரச்சினையாகவோ இல்லை! தென்னாடு முழுவதுமுள்ள பத்துகோடி மக்களின் எதிர்கால வாழ்வை நிர்ணயிக்கும் பெரும் பிரச்சினையாக இருக்கிறது! இதில் நாம் பெறக்கூடிய வெற்றி தோல்வியைப் பொறுத்துத்தான் நமது எதிர்காலம் அமையப் போகிறது என்பதை அரசியல் உலகில் இருப்பவர்கள் மட்டுமல்ல, அரசியலுக்கு அப்பாற்பட்ட பல்வேறு துறைகளில் ஈடுபட்டவர்களும் உணர்ந்துள்ளார்கள்!

அண்மையில், இந்தியைப் புகுத்தும் கொள்கையைக் கைவிடுமாறு இந்திய பிரதம மந்திரியை வற்புறுத்தி, தென்னாட்டில் பிரபலமாக விளங்கிடும் 35 பேர்கள் ஒரு கடிதத்தை அனுப்பியுள்ளார்கள். அந்த வேண்டுகோளும், அதில் கையொப்பமிட்டுள்ளவர்கள் பட்டியலும் இந்த இதழில் வேறு பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியை எதிர்க்கும் நம்மை வேண்டுமானால், வேறு காரணங்கள் சொல்லி ஒதுக்கித்தள்ள முயலலாம்; எதிர்க்கட்சியினர் என்றோ, என்றும் இந்தியை எதிர்த்து வருபவர்கள் என்றோ, எதற்கெடுத்தாலும் வடக்கு—தெற்கு பார்ப்பவர்கள், நாட்டுப் பிரிவினையினர் நாசகாலர்கள் என்றெல்லாம் தூற்றுவதன்மூலம் சமாளிக்க நினைக்கலாம்! அத்தகைய குற்றச் சாட்டுகளில் எதையும் அவர்கள் பேரில் சாட்டமுடியாது! நம்மைத் துரோகிகளென குற்றஞ் சாட்டுகிற சுப்பிரமணியம் போன்ற "கனம்" பெற்ற காங்கிரசுக்காரர்களுக்கெல்லாம், அரசியல் குருவாக விளங்கியவர்கள் அவர்கள்! பரத கண்டத்தின் அரசாங்கத்திலும் அரசியலிலும் பொறுப்புவாய்ந்த உயர் பதவிகளில் அவர்களில் பலர் இருந்திருக்கிறார்கள். ஏன் அதில் கையொப்பமிட்டுள்ள ஒருவர் உயர் பதவிகளுக்கெல்லாம் எட்டாத உயரத்தில் இருக்கிற தலைவர் பதவியையே வகித்திருக்கிறார்! அவர்களில் பலர் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்கள்—அரசியலில் செல்வாக்குப் பெற்று விளங்கி இப்பொழுது ஓய்வு பெற்றிருப்பவர்கள்—சிலர், அரசியல் பிடிக்காதவர்கள், அதிலும் நாம் கூறுகிற அரசியலை வேம்பெனத் தள்ளுபவர்கள். பல துறைகளில், பல்வேறு வகைகளில் அவர்கள் ஈடுபட்டிருந்தாலும், அவர்களுடைய திறமையையோ, கல்வி நலத்தையோ எவரும் குறைகூற முடியாது. பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள், நீதிமன்றத் தலைவர்வர், பத்திரிக்கை ஆசிரியர்கள், தொழிலதிபர்கள், கல்லூரிப் பேராசிரியர்கள், கலைத் துறையில் சிறப்பெய்தியவர்கள், கலாசார, பண்பாட்டு, ஆராய்ச்சி மன்றங்களில் முதன்மை பெற்றவர்கள், ஒவ்வொரு துறையில், வல்லுநர்களாகத் திகழ்ந்தவர்களும், நீடித்து இருப்பவர்களும், ஒன்றுகூடி தென்னாட்டின் சார்பாக இந்தத் திருமுகத்தை பண்டித நேருவுக்கு அனுப்பியுள்ளார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் கூறும்பொழுது வேண்டுமானால் "இவர்கள் கூறுவதா? நாம் கேட்பதா?" என்று அரசாங்கம் இருந்து விடலாம். இவர்கள் கூறும்பொழுது, அத்தகை ஆணவப்போக்கு இருக்கநியாயமில்லை! இதற்கு இணங்கினால், இவர்களுக்கு விட்டுக் கொடுத்தால், அரசியல் பலம் எவ்வாறு மாறுமோ என்று இந்த பேர்களைப் பார்த்து அவநம்பிக்கை கொள்ளத் தேவையில்லை.

**தென்னாட்டுப் பிரமுகர்கள் அனுப்பியுள்ள வேண்டுகோளின்மீது, தமது இந்தித் திணிப்பு கொள்கையை பண்டித நேரு கைவிடலாம். தவறைத் திருத்திக்கொள்ள இது மிக நல்ல சந்தர்ப்பம்!**

**தவறைத் திருத்திக்கொள்ள இது நல்ல சந்தர்ப்பம் மட்டுமல்ல, இதுதான் கடைசிச் சந்தர்ப்பம்கூட!**

இவ்வளவு அமைதியான முறையில் பிரச்சினையை விளக்கி, மீண்டும் சீர்தூக்கிப் பார்த்து முடிவை மாற்றிக் கொள்ளுமாறு, தென்னாட்டைச் சேர்ந்தவர்கள்—அதிலும் இந்த வேண்டுகோளில் கையொப்ப மிட்டவர்களைப் போன்றவர்கள் ஒன்றுகூடி வினயமாகக் கேட்டுக் கொள்ளும் வாய்ப்பு இனி ஏற்படாமற் போகலாம்! பண்டித நேருவுக்குக்கிடைத்துள்ள கடைசி வாய்ப்பு, கடைசித் திருமுகம் இதுதான்!

அரசியலிலும், மற்றத் துறைகளிலும், அவரைவிட அதிக அனுபவமும் அறிவும் உள்ளவர்கள்—35 பேர்கள் ஒன்றுகூடி கேட்கிறார்கள்! பண்டித நேருவுக்கு உண்மையிலேயே அரசியல் விவேகம் இருந்தால், இந்த வேண்டுகோளை அவர் ஏற்றுக்கொள்ள வேண்டும்! இவர்கள்தாம் பண்டித நேருவுக்கும், காங்கிரசுத் தலைவர்களுக்கும் தென்னாட்டில் கிடைக்கக்கூடிய கடைசி நண்பர்கள்! நண்பர்கள் என்றால் இதுவரை உதவியாக ஒத்துழைத்து வந்த நல்ல நண்பர்கள்! காங்கிரசு ஆட்சி பீடம் ஏறியதும் பலப்பல "புது நண்பர்கள்" கிடைத்துள்ளார்கள்! அவர்கள் தங்கள் தங்களுடைய குறைபாடுகளைச் சொல்வார்கள், இவர்கள் அப்படியல்லாமல் தங்கள் நாட்டுக்கு நேர்ந்துள்ள குறைகளை விளக்கிச் சொல்கிறார்கள்! அந்தக் கடைசி நண்பர்கள் கூறும் நல்லுரையையாவது பண்டித நேரு கேட்டால்தான் நல்லது!

இரா. செழியன்

இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தை பண்டித நேரு பயன்படுத்திக் கொண்டால், அவருக்கும் நல்லது, காட்டுக்கும் நல்லது, தென்னாட்டுக்கும் நல்லது! எல்லாவற்றையும் விட வடநாட்டுக்கும் இந்தி மொழிக்கும் நல்லது! ஆதிக்க எண்ணத்தை ஒரு பகுதி மக்களிடம் ஊட்டிவிட்டால், அதனால் மற்ற பகுதி மக்களுக்கு உண்டாகிற தீங்குகளைவிட, ஆதிக்க வெறியை ஏ...

(11-ம் பக்கம் பார்க்க)

# தென்னகம் முழுவதும்

★

—(0)—

## இந்திக்கு எதிராக உள்ளது!

—(0)—

### நேரு பண்டிதருக்குத் தென்னாட்டுப் பிரமுகர்கள் அறிவுறுத்தல்.

—0—

**தென்னாட்டைச் சேர்ந்த நல்லறிஞர்கள் பலர்—அவர்கள் பல்வேறு துறைகளிலும் தலைசிறந்து விளங்குபவர்கள்—ஒன்றுகூடி, இந்தியை அரசாங்க மொழியாக்கும் தீய திட்டத்தைக் கைவிடுமாறு பண்டித நேருவைக் கேட்டுக்கொண்டுள்ளனர். அவர்கள் விடுத்த வேண்டுகோளின் மொழிபெயர்ப்பு இங்கு தரப்பட்டுள்ளது.**

அரசியல் வாதிகளைத் தவிர மற்றவர்கள் ஆர்பாட்டங்களில் ஈடுபடவில்லையென்ற போதிலும், தென்னாட்டு மக்கள் அனைவரும் அரசாங்க மொழியாக இந்தி வருவதற்கு எதிர்ப்புடன் இருக்கின்றனர். அரசாங்க மொழிக்குழுவினர் முன் சென்னை அரசாங்கத்தின் சார்பாகத் தரப்பட்ட சாட்சியிலிருந்து தென்னாட்டு காங்கிரசுக்காரர்களும் இந்தி புகுத்தப்படுவதற்கு எதிராக உள்ளனர் என்பது நன்கு தெரியவரும். கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக எதிர்ப்பு வேகம் குறைந்து காணப்பட்ட போதிலும், இந்தி புகுத்தப்படுவதை அவர்களும் எதிர்க்கிறார்கள் என்பது தெரிவிக்கப்பட்டு விட்டது. அரசாங்கத்திலும் வாணிபத்துறையிலும்; கல்வி நிலையங்களிலும் பணியாற்றுபவர்கள் வெளிப்படையாகத் தமது கருத்தைத் தெரிவிக்க அஞ்சுவது இயல்பானதே!

### ஒற்றுமையா? ஒரே விதமா?

இந்தியப் பண்பாடு, பல்வேறு வட்டார மொழிகளின் அடிப்படையில் பலவிதமாகக் காட்சியளிக்கிறது. ஆனால் இவற்றால் மட்டும் ஒற்றுமைக் குலைந்து போகுமென்று கூற முடியாது. வட்டார மொழிகளைப் பாதுகாப்பதும், வளப்படுத்துவதும் இன்றியமையாதது என எல்லோரும் ஒப்புக்கொள்கின்றனர். வட்டார மொழிகள் அந்தந்த மக்களின் உள்ளக்கிளர்ச்சியிலிருந்தும் பண்பாட்டிலிருந்து வளர்ந்து வந்தவைகளாகும். இப்பொழுது அகில இந்திய ரீதியில், அரசாங்கத்தின் நிர்வாக மொழியாக இந்தி கொண்டுவரப்படுகிறது. இதில் கௌரவத்துக்கோ, தற்பெருமைக்கோ இடமில்லை! உணர்ச்சி வயப்பட்டு முடிவெடுப்பது கூடாது. எது பலன் தரத்தக்கது எது நடைமுறைக்கு வசதியானது என்பதைப் பார்க்கவேண்டும். ஒற்றுமை வேண்டும் எனக் கூக்குரலிடுபவர்கள், ஒற்றுமை என்பதை ஒரேவிதம் எனக் குழப்பமடைந்து தவறான வழியில் இறங்குகிறார்கள்!

### மற்றவர்களுக்குத் திண்டாட்டம்

உணர்ச்சி வயப்பட்டு ஒரு முடிவை எடுத்தால், அந்த முடிவுக்குத் தாம் கொண்ட உணர்ச்சியை மட்டும் தகுந்த காரணமாகக் காட்ட முடியாது. அதிலும் தங்களுடைய நலன்கள் பாதிக்கப்படுவதாக எண்ணிப் பெரும்பாலான மக்கள் எதிர்க்க ஆரம்பித்தால், அது பெரிய ஆபத்தாக முடியும். இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள் அம்மொழியில் அடையக்கூடிய திறமையை

### கையொப்பமிட்டவர்கள்.

1. சி. பி. இராமசாமி அய்யர்
—முன்னாள் துணைவேந்தர், அண்ணாமலை, காசி பல்கலைக் கழகங்கள்.
2. கே. சீனிவாசன்
—'இந்து' ஆசிரியர்.
3. டி. எம். கிருஷ்ணசாமி அய்யர்
—திருவாங்கூர் மாநில உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி.
4. சி. இராசகோபாலாச்சாரியார்
—முன்னாள் கவர்னர்-ஜெனரல்.
5. எம். ஜி. மணவாளராமானுஜம்
—அண்ணாமலைப் பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர்.
6. எஸ். அனந்தராமகிருஷ்ணன்
—பிரபல தொழலதிபர்.
7. ஆர். வி. கிருஷ்ண அய்யர்
—சென்னை சட்டசபையின் முன்னாள் செயலாளர்.
8. சி. ஆர். சீனிவாசன்
—'சுதேசமித்திரன்' ஆசிரியர்.
9. ஏ. என். சிவராமன்
—'தினமணி' ஆசிரியர்
10. எஸ். பி. ஆதித்தன்
—'தினத்தந்தி' ஆசிரியர்.
11. எஸ். எஸ். வாசன்
—'ஆனந்தவிகடன்' ஆசிரியர்.
12. டி. சதாசிவம்
—'கல்கி' ஆசிரியர்.
13. காசா சுப்பாராவ்
—'சுயராஜ்யா' ஆசிரியர்.
14. வி. எல். எத்திராஜ்
—வழக்கறிஞர் சங்கத் தலைவர்.
15. வி. சி. கோபாலரத்தினம்
—வழக்கறிஞர் சங்கத் தலைவர்.
16. எம். எஸ். ஏ. மஜீத்
—தென்னிந்திய முஸ்லிம் கல்விச் சங்க கௌரவச் செயலாளர்.
17. எம். சுப்பராய அய்யர்
—விவேகானந்தா கல்லூரி செயலாளர்.
18. ஆர். கிருஷ்ணமூர்த்தி
—பச்சையப்பன் கல்லூரி தலையாயர்.
19. எம். கே. சண்முகம்
—சர். தியாகராயர் கல்லூரி தலையாயர்.
20. ஆர். பி. சேதுப்பிள்ளை
—சென்னை பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்.
21. எம். எம். பட்
—சென்னை பல்கலைக் கழக கன்னடப் பேராசிரியர்.
22. திருமதி. ருக்மணி அருண்டேல்
—அடையாறு கலா க்ஷேத்திரம்.
23. திருமதி. எம். எஸ். சுப்புலட்சுமி
—பிரபல இசைவாணி.
24. டி. கே. சண்முகம்
25. டி. கே. பகவதி
—பிரபல தமிழ் நாடகக் கலைஞர்கள்.
26. ஏ. ஜி. வெங்கடாச்சாரி
—தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர்.
27. எஸ். ஆர். வெங்கட்ராம
—இந்திய ஊழியர் சங்கச் செயலாளர்.
28. கே. கோதண்டபாணி பிள்ளை
—தமிழ்க் கலாச்சாரக் கழகச் செயலாளர்.
29. ஏ. சுப்பையா
—தென்னல ஆய்வு மன்றத் தலைவர்.
30. எஸ். நாராயணசாமி
—ஒய்.எம்.ஐ.ஏ. செயலாளர்
31. பி. ஜே. அனந்தராஜ்
—ஒய். எம். ஐ. ஏ செயலாளர்
32. திருமதி. எம். ஏ. பிதாவதியன்
—ஒய்.டபிள்யூ.சி.ஏ. தலைவர்.
33. எச். சி. கோதாரி
—சென்னை ஸ்டாக் எக்சேஞ்சு தலைவர்.
34. வி. எஸ். எல். நாதன்
—தமிழ் வர்த்தகக் கழக கௌரவச் செயலாளர்.
35. எஸ். செல்லசாமி
—ஆட்சிமொழி மாநாட்டுச் செயலாளர்.

★

இந்தியல்லாத மற்ற மொழியினர் அடைய முடியாது. இதனால் அரசாங்கத்திலும், மற்றத் துறைகளிலும் இந்தி மொழியினர்க்குக் கிடைக்குப் சாதகமான நிலை, இந்தியல்லாத மொழியினர்க்கு இருக்காது. ஆக தங்களுடைய நலன்களும் வாய்ப்புகளும் பாதிக்கப்படுமென இந்தியல்லாத மற்ற மொழியினர் அஞ்சுவதில் நியாயமிருக்கிறது. இந்தப்பாதகமான நிலை நிரந்தரமாக இருக்கும். இந்தச் சாதக-பாதக நிலை வேண்டுமென்று உண்டாக்கப்படாததாக இருக்கலாம். இருந்தாலும் செயல் முறையில் அத்தகைய நிலை உருவாகிவிடும்.

### பலன் என்ன?

பழக்கமான மொழியை அப்புறப்படுத்திப் பழக்கமில்லாத புதிய மொழியைக் கொண்டு வருவதில், அநேக சங்கடங்கள் மூளும் என்பதை யாரும் மறுக்கமுடியாது. சங்கடங்களையெல்லாம் ஏற்றுப் புதியமொழி ஒன்றைக் கொண்டு வருவதால் என்ன பலன்புதிதாகக் கிடைக்கப் போகிறது? எந்தப் பலனும் இருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை.

ஒரு அன்னிய மொழிக்குப் பதிலாக ஒரு தேசிய மொழி வேண்டும் என்ற உணர்ச்சியை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது. அத்தகைய உணர்ச்சி அரசியல் துறையில் சில சமயம் தவறான வழியில் திருப்பப்பட்ட போதிலும், அந்த உணர்ச்சிக்கு ஓரளவு அர்த்தமிருக்கிறது. ஆனால் வழக்கத்திலிருக்கிற அரசாங்க மொழியை விலக்கிவிட்டு புதிதாக ஒரு அரசாங்கமொழியைப் புகுத்த நினைப்பதில் அர்த்தமில்லை. எதிர்காலத்தில் என்றைக்காவது ஒருநாள் இந்தியா முழுமையும் எல்லா மக்களும் பேசப்படும் மொழியாக இந்தி வந்துவிடும் என்று நம்புவதற்கு இடமிருந்தால், இப்பொழுது அரசாங்க மொழியாக இந்தியைப் புகுத்துவதில் அர்த்தமிருக்கும். ஆனால் அந்த நம்பிக்கை என்றைக்கும் நினைத்துப்பார்க்க முடியாத—நிறைவேறாத—முடியவே முடியாத ஒன்றாகும்.

### ஆங்கிலத்தின் நலன்

இந்தியாவைப் பொறுத்தவரை, உயர்தரக் கல்வித் துறைகளிலும் குறிப்பாக தொழில் நுட்பத்திலும் விஞ்ஞானப்பகுதியிலும், ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளவேண்டிய இன்றியமையாமை இருக்கிறது. அகில உலகத் தொடர்பு கொள்ளவும் பிறநாடுகளுடன் வியாபார வாணிபத் தொடர்பு

(11-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

ஞாயிறு 3—11—57 சென்னை

# கட்டாய இந்தி!

“இந்தியைக் கட்டாயப் படுத்தமாட்டோம்” என்று இந்தியக் குடியரசுத் தலைவர் இராசேந்திர பிரசாத் கூறியிருக்கிருர்!

“இந்தியை எவர் மீதும் திணிக்கும் எண்ணம் எங்களுக்குக் கிடையாது. மற்ற மொழியினர் இது குறித்துச் சிறிதும் கவலைப்பட வேண்டாம்.” என இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேரு உறுதிமொழிகள் அளித்துள்ளார்!

இருவரும் இந்திய அரசாங்க அமைப்பில் முக்கியமான பதவிகளில் இருப்பவர்கள். சாதாரணமாக தாம் தரும் வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய ஆற்றலும் அதிகாரமும் அவர்களிடமிருக்கின்றன. அவர்கள் அனுமதியின்றி, அரசாங்கக் காரியங்கள் எதுவும் நடைபெற முடியாது. தனிப்பட்ட முறையிலும், சொன்ன சொல்லைக் காப்பாற்றக் கூடியவர்கள். சொல்வது ஒன்ருகவும் செய்வது ஒன்ருகவும் இருந்ததில்லை எனப் பெயரெடுத்தவர்கள். இந்தி வந்தால் தங்களுக்குப் பாதகங்கள் நேரும் என்று அஞ்சுகிற இந்தியல்லாத மற்ற மொழியினர்களுக்கு, குடியரசுத் தலைவரும் பிரதம மந்திரியும் தந்த உறுதிமொழிகள் ஆறுதலளிப்பதாக இருந்தன!

ஆனல் அந்த ஆறுதல் நீடித்து நிலைக்கவில்லை. “இந்தியைக் கட்டாயப்படுத்த மாட்டோம்” என்று ஒருபுறம் இவர்கள் வாக்குறுதிகளை மிகத் தாராளமாகத் தந்துவிட்டுப் போகிருர்கள். மற்ருெருபுறம் அவர்களுடைய அரசாங்கம் மிக அவசரமாக இந்தியைக் கட்டாயப் படுத்திக்கொண்டு வருகிறது.

தபால்—தந்தி, இரயில்வே, வானொலி, செய்திப்படங்கள் இவைகள் மூலம் இந்தி திணிக்கப்படுகிறது. இரயில்வே இலாகாவில் இந்தி திணிக்கப்படுவதற்கு அண்மையில் வெளிவந்த அரசாங்க அறிக்கை ஒன்றே சான்ருக உள்ளது.

19—10—57இல் புது டில்லியிலிருந்து வெளியான அரசாங்கச் செய்தி இலாகாவின் அறிக்கை எண் 86, பக்கம் 2829இல் கீழ்க்கண்ட செய்தி தரப்பட்டுள்ளது.

“ரயில்வே தந்தி நிலையங்களிலுள்ள சமிக்ஞையாளருக்கு (சிக்னல் சிப்பந்திகளுக்கு), இந்தி மோர்ஸ் கோட் பயிற்சியைக் கட்டாயமாக்க வேண்டுமென்று ரயில்வே போர்டு முடிவு செய்திருக்கிறது.

இந்தியில் அனுப்பப்படும் தந்திகள் அதிகரித்து வருவதால் அதைச் சமாளிப்பதற்குப் போதுமான சிப்பந்திகளை திரட்டுவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது. இனிமேல், சிப்பந்திகள் ‘சிக்னலர்களாக’ நியமிக்கப் படுமுன் அளிக்கப்படுகிற பயிற்சியில் இந்திமோர்ஸ் கோட் பயிற்சியும் ஒரு பகுதியாக இருக்கும்.

ஏற்கனவே சேவையிலிருக்கிற ஊழியர்களை ஊக்குவிப்பதற்காக, ஏற்கனவே சேவையிலுள்ள டெலிகிராபிஸ்டுகளில் சிக்னலர்களாவதற்குத் தெரிந்தெடுக்கப் பட்டுள்ளவர்கள் இந்தி ‘மோர்ஸ்’ முறையில் தேர்ச்சி பெற்ருல் அவர்கள் ஒவ்வொருவருக்கும் 50 ரூபாய் கௌரவ நன்கொடை வழங்க ரயில்வே நிர்வாகங்களுக்கு ரயில்வே போர்டு அனுமதியளித்திருக்கிறது.”

இதற்கு என்ன அர்த்தம்?

நேரு பண்டிதரும், இராசேந்திர பிரசாதும் “இந்தியைக் கட்டாயப்படுத்த மாட்டோம்” என்று வாக்குறுதிகள் தருகிருர்கள். இங்கு இரயில்வே இலாகா தந்தியில் இந்திப் பயிற்சியைக் கட்டாயமாக்க உத்தரவிடுகிறது.

இனிமேல் தந்தியனுப்பும் வேலைக்கு வருபவர்களுக்கு, இந்தி முறையில் பயிற்சி பெற்ருக வேண்டும் என்றும் உத்தரவிடுகிறது.

தந்தி யனுப்புவதற்கு இந்தி முறையைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்ருல், இந்தி எழுத்துக்களையும் அவன் கற்றுக் கொள்ளவேண்டும் இந்திச் சொற்களையும் கற்றுக்கொள்ள வேண்டும், இந்தி மொழியையேக் கற்றுக் கொள்ள வேண்டும்! இரயில்வேயில் தந்தி பகுதியில் வேலை வேண்டுமென்ருல், ஒருவன் கட்டாயமாக இந்தியைக் கற்றுத்தாளுக வேண்டும்.

இந்தி ஏன் கட்டாயப்படுத்தப்படுகிறது என்பதற்கு இரயில்வே போர்டு ஒரு போலிக் காரணத்தைக் கட்டியிருக்கிறது. “இந்தியில் அனுப்பப்படும் தந்திகள் அதிகரித்து வருவதால், அதைச் சமாளிப்பதற்குப் போதுமான சிப்பந்திகளை திரட்டுவதற்காக இந்த ஏற்பாடு செய்யப்படுகிறது.” இந்தி அனுப்பப்படும் தந்திகள் எங்கே தரப்படுகின்றன? திருச்சினுப்பள்ளிக்குப் பக்கத்திலிருக்கிற சோமரசம் பேட்டை இரயில்வே நிலையத்திலிருப்பவனும், மலையாளத்தில் ஒட்டப்பாலத்தின் பக்கத்திலிருக்கிறவனும், ஆந்திராவில் நெல்லூருக்குப் பக்கத்திலும், கன்னடத்தில் மைசூருக்குப் பக்கத்திலும் இருக்கிறவர்களும் இந்தியில்தானு செய்திகளை எழுதிவைத்துக்கொண்டு “ஐயோ! இந்தியில் அப்படியே அனுப்ப வசதியில்லையே?” என்று புலம்பிக் கொண்டிருக்கிருர்கள்? இந்தியில் தந்தியை அனுப்பக்கூடிய இடங்களில், வேண்டுமானல் உத்தரப் பிரதேசத்திலும் மத்திய பிரதேசத்திலும் மட்டும் இந்தி இருக்கலாம். இந்த இரண்டு மாநிலங்களில் மட்டும் இருப்பவர்களுக்காக, இந்திய துணைக்கண்டம் முழுவதிலும் இருக்கக்கூடிய இரயில்வே நிலையங்களில் வேலைப்பார்க்கக் கூடியவர்கள் எல்லாம் இந்தி முறையைக் கற்ருக வேண்டும் என்பது எந்த வகையில் நியாயமானது?

இனிமேல் தந்தி அனுப்பும் வேலைக்கு வருகிறவர்கள் இந்தி முறையைக் கற்றுக் கொள்ளவேண்டும் என்பது கட்டாயமாகிவிட்டது. அந்த வேலைகள் இனி யாருக்குக் கிடைக்கும்? இந்தி பேசத் தெரியாதவர்களும் இந்திபேசத் தெரிந்தவர்களும் அந்த வேலைகளுக்கு மனுச் செய்தால் இந்தி தெரிந்தவனுக்குத்தான் அந்த வேலை கிடைக்கும். ஏனென்ருல் மற்றவர்களைவிடச் சுலபமாக அவனல்தான் இந்தி முறையைக் கற்றுக்கொள்ள முடியும். சுலபமாக இந்திமுறை வருபவர்களுக்குத்தான் இயல்பாக அங்கே இடம் கிடைக்கும். இந்தியா முழுவதும் இந்தியைப் பரப்பும் முயற்சியில், எல்லா இடங்களிலும் இந்தி பேசத் தெரிந்தவர்கள் பரவி ஆதிக்கஞ் செய்ய முயல்கின்றனர்.

இந்தியை நேரடியாகக் கட்டாயப் படுத்தினல்தான் அது கட்டாயம் என்று அர்த்தமில்லை, இந்தியைக் கற்றுக் கொண்டால் அனுகூலங்கள் உண்டாகும் என்பதே அதை மறைமுகமாகக் கட்டாயப் படுத்துவதாகும். மேற்சொன்ன இரயில்வே உத்தரவில் இனிமேல் நியமிக்கப் படுபவர்களுக்கு இந்திமுறைப் பயிற்சி கட்டாயம் என்று இருக்கிறது. அத்துடன் இப்பொழுது உள்ளவர்கள் இந்தி முறையைக் கற்றுக்கொண்டால், 50 ரூபாய் நன்கொடை தரப்படும் என்று கூறுகிறது. இது ஆசை காட்டி, மறைமுகமாகக் கட்டாயப் படுத்துவதாகும்.

ஒரு பெண்ணைக் கட்டாயப் படுத்தி கற்பைச் சூறையாடுவதும் குற்றம்; “50 ரூபாய் நன்கொடை தருகிறேன்” என்று பணத்தைக் காட்டி, அவளை இணங்கவைப்பதும் குற்றம்!

மண்டையிலடித்துப் பணிய வைத்தாலும், பணத்தைக் காட்டி மயங்க வைத்தாலும், எந்த வழியில் செய்யப்பட்டாலும் இந்தியைக் கொண்டு வருவது தவருனது, குற்றமுடையது. வேண்டாம் இந்த விபரீத முயற்சி என நாம் எச்சரிக்கிருேம்!

# ★ தட்டைக் கிருஷ்ணருக்குப் பட்டை நாமம் ! ★

——(0)——

## "கிருஷ்ண தூது" கதையில் ஒரு காட்சி!

——(0)——

"அஃதோ தெப்படி யென்றால், கேளுமையா! மகா கனம் பொருந்திய, மாவீர தீர பராக்கிரம, ராஜயோக ராஜகம்பீர ராஜ மார்த்தாண்ட, ராஜாக்களுக்கெல்லாம் ராஜாவாக, மந்திரிகளுக்கெல்லாம் மந்திரியாக, தந்திரிகளுக்கெல்லாம் தந்திரியாக, இந்தப் பரதகண்டத்துப் பணத்துக்கெல்லாம் அதிபதியாக உள்ள எம்பெருமான் திருவள்ளூர் தட்டை கிருஷ்ணமாச்சாரியார் அமெரிக்காவை நோக்கிப் புறப்பட்டார்!

"அவர் எப்படிப் புறப்பட்டாரென்றால் நல்ல நாள்பார்த்து, நட்சத்திரப் பலன் பார்த்து, இருவருடைய நட்சத்திரப் பலனைப் பார்த்து எதிரிகளின் நட்சத்திர பலன்களையும் பார்த்து, இந்தப் பரதகண்டத்து தரித்திர ஜாதகப்பலனையும்பார்த்து, யோகம், வாரம், சூலை, கண்டம் ஆகிய பலாபலன்களைக் கண்டறிந்து, சகல சம்பத்துக்களைத் தரவல்ல புண்ணிய தினத்திலே அவர் புறப்பட நாள் குறித்தார்கள்! அதன்படி அந்த சுபதினத்தில், விடியற்காலத்தில் சூரியோதயத்தில் எழுந்து, ஞானுனுஷ்டான கிரியைகளை முடித்துக் கொண்டு, போசனஞ் செய்து, கைகால் சுத்தி செய்துகொண்டு, உல்லாசமாக வெகு சப்பிரமத்துடன், கந்த புட்ப பரிமளாதிகள் அணிந்து, கற்பூர முதலிய பரிமள வஸ்துக்களோடு தாம்பூலம் தரித்துக்கொண்டு, திவ்ய வஸ்திராபரணங்களை அலங்கரித்துக்கொண்டு; கலிகாலங்கண்ட அந்த கிருஷ்ண பகவான் — கிருஷ்ணமாச்சாரியார் விமான நிலையத்தை நோக்கி வந்து சேர்ந்தார்.

"அங்கு அவருடைய வரவுக்காகக் காத்திருந்த பக்த கோடிகளும் பணக்கார தேவதைகளும் 'ஹரே கிருஷ்ணு! திருவள்ளூர் கிருஷ்ணு! தென்சென்னை தேர்ந்தெடுத்த கிருஷ்ணு! மாயாவதாரங்கள் செய்து, மந்திர தந்திரங்கள் செய்து, அதிகாரமென்ற கோதண்டத்தில், பணம் என்ற அக்னியாஸ்திரத்தை விட்டு, உன்னை எதிர்த்த அந்த பால சுப்பிரமணியமென்னும் பரம எதிரியைத் தோற்கடித்த வீர தீரரல்லவா நீர்! நீர் மனம் வைத்தால், தோல்வியும் வெற்றியாகுமே! ஹரே! கிருஷ்ணு! முகுந்தா! முராரி! பூபாரத்தைத் தீர்த்ததுபோல, இந்த புண்ணிய பூமிக்கு ஏற்பட்டுள்ள கடன் பாரத்தைத் தீர்க்க ஒரு வழி செய்ய மாட்டீரா? தேவ! கோபியர் கொஞ்சும் ரமணு! கோபால புரத்தில் வசிக்கும் கிருஷ்ணு! 'துவாரகா' என்ற மாளிகையில் இருப்பவனே! முன்பெல்லாம் நாங்கள் யமுனை நதியில் நீராடும் பொழுது, எங்களை முதலில் பரதவிக்கச்செய்து, பின் ஜலக்கிரீடை செய்து மகிழச் செய்து, உள்ளத்தின் துன்பம் போகவும் உடம்பின் மாசுபோகவும், சோப்புக் கட்டிகளைத் தந்து ஆதரித்த குணாளனல்லவா நீர்! அன்றைய தினம் நாமெல்லாம் ஒன்றாக இருந்து ஆடிப்பாடி, பணத்தைத் தேடி அடைந்ததை மறந்து விட்டீரோ! சுவாமி! எங்களுக்குற்ற கஷ்டத்தைப் போக்க நீர்தான் இப்பொழுது ஒரு திருவிளையாடல் புரிந்தாக வேண்டும்! எங்களுக்கு வேண்டிய சொர்ணக் குவியல்—தங்கத்தாமரை, ஏழுகடலுக்கப்பால் அமெரிக்கா என்ற கண்டத்தில் அசட்டு மிலேச்சர்கள் கையில் இருக்கிறது! அந்த மிலேச்சர்கள் அசடர்கள் மட்டுமல்ல, மூடர்கள்கூட! எப்படியாவது நீர், உமக்குத்தெரிந்த வித்தைகளில் எதையாவது பிரயோகித்து, மோகினியவதாரம் எடுத்தோ விசுவரூபம் காட்டியோ, எப்படியாவது அந்த சொர்ணத்தை இங்கு கொண்டு வந்து விடவேண்டும், பிரபு' இப்படியாக தோத்திரம் பாடினார்கள்.

"பகவான் திருவள்ளூர் தட்டைக் கிருஷ்ணமாச்சாரியார் ஏறிச் செல்லவேண்டிய புஷ்ப விமானம் வந்து நின்றது. கிருஷ்ணன் புறப்படவேண்டிய நேரம் வந்தது. அப்பொழுது அங்கு கூடியிருந்த பரத கண்டத்துப் பெரியவர்களும், ராஜேந்திரரும், தேவேந்திரர்களும் ஆசிர்வதித்தார்கள்! முனிபுங்கவர்களும், பெரும் முதலாளிகளும் தோத்திரம் பாடினார்கள்! தேவதேவர்களும், தேபர் பெருமானும் மலர்மாலைகளைப் போட்டார்கள்! தேவ கன்னிகை போன்ற மாது சிரோன்மணிகள் ஆலாத்தி எடுத்து, திருஷ்டி கழித்தார்கள்! பக்த கோடிகள் பக்தி பாசுரங்களை இடைவிடாமல் பாடினார்கள், பத்திரிக்கைக்காரர்கள் படங்கள் எடுத்தார்கள்!

"இவ்வளவு வைபோகங்களுக்கிடையே நமது கிருஷ்ண பகவான் புஷ்ப விமானத்தில் ஏறி அமர்ந்தார். கூடியிருந்தவர்களெல்லாம் 'ஓ! கிருஷ்ணு! துவாரகபுரிவாசா! டில்லிப் பட்டணத்து நேசா! அரிகரி கோபாலா! அதை ரட்சகா! ஆபத்பாந்தவா! அமெரிக்கத் தங்கத்தைக் கொண்டுவா!' என்று வாழ்த்தி, கடைசியாக 'கோவிந்தா, கோவிந்தா!' என்று கூவினார்கள். அப்பொழுது எல்லோருடைய கண்ணுக்கெதிரில் புஷ்ப விமானம எழுந்து ககனமார்க்கமாய்ப் பறந்து சென்றது.

"இப்படியாகத்தானே ஆச்சார்ய கிருஷ்ணபகவான் புறப்பட்ட விமானம், சிங்கார வனங்கள், பூஞ்சோலைகள், பசும் புல் தரைகள் பாலைவனங்கள் தாண்டி, காடு மலைகள் வனவனாந்திரங்களைக் கடந்து, சுனைகள் ஆறுகள் மடுக்கள் இவைகளைக் கடந்து, ஏழு கடல்களையும் தாண்டி, தங்கத் தாமரைகள் மலர்ந்திடும் அமெரிக்கா என்ற சொர்ண பூமியில் போய் சொகுசாக இறங்கியது."

என்ன ஐயா! காலட்சேபமாக செய்கிறீர்கள் என்று கேட்கத்தோன்றும்.

நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார்—அவர் முழுப் பெயர் திருவள்ளூர் தட்டை கிருஷ்ணமாச்சாரியார் என்பது—அமெரிக்கா சென்ற வைபோகத்தை நினைத்தால், செய்யப்பட்ட உபசாரங்களையும் தரப்பட்ட விளம்பரங்களையும் நினைத்தால், ஒரு கதாகாலட்சேபம்செய்து, சதாபாடிக் கொண்டிருக்கலாம் போல தோன்றுகிறது. "புலந்திரன் தூது" மாதிரி "டி. டி. கே தூது" என்று பாடலாமா என்று தோன்றுகிறது! அப்படி "டி. டி. கே தூது" பாடி, பெரிய எழுத்தில் போட்டால், யார் வாங்கினாலும் வாங்காவிட்டாலும், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இலக்கிய நூல்கள் வளர்ச்சியின் கீழ் இதற்கு நிச்சயம் ஒரு மான்யம் கிடைத்துவிடும். அதை நினைத்து தான் கதாகாலட்சேபம் துவக்கப்பட்டது.

கிருஷ்ணமாச்சாரியார் அமெரிக்காவுக்குப் புறப்படுகின்ற வரைதான் எழுத முடிந்தது.

அதற்குமேல்......

அதற்கு மேல்......!

அவ்வளவுதான்! அதற்கு மேல் எழுதமுடியவில்லை!

ஏனென்றால் அதற்குமேல் எழுதுவதற்கு ஒன்றுமில்லை!

இந்த கிருஷ்ண பரமாத்மா அமெரிக்காபோகிற வரை எல்லாம் விமரிசையாக நடைபெற்றன, அவற்றையெல்லாம் விளக்கமாக எழுதலாம். அதற்கப்புறம் எழுதும்படி ஒன்றும் நடைபெறவில்லை. எனவே முடியவில்லை! வேண்டுமானால் "இவ்வளவு அலங்கார ஆடம்பரங்களுடன் கிளம்பிச் சென்ற திருவள்ளூர் தட்டைக் கிருஷ்ணமாச்சாரியார், நியுயார்க் என்னும் குபேரப் பட்டணத்தில் தட்டையேந்தி யுகாதி காலம் நின்றும், ஏதும்தட்டில் விழாத காரணத்தால், விமானத்திலேறி வெறுங்கையோடு இப்பழம் பெருமை பொருந்திய பரத கண்டத்துக்குத் திரும்பி வந்தார்" என்று முடிக்கலாம்!

பிரமாதமாக ஆரம்பிக்கப் பட்ட கதை இப்படி உப்புச்சப்பில்லாமல் சுருக்கமாக முடிந்து விடுகிறதேயென்றால் என்ன செய்வது, அந்தத் தட்டைக் கிருஷ்ணர் இப்படிக் கதையைத் தட்டையாகத் தட்டி விட்டாரே!

கதைகளில் ஆரம்பம் பிரமாதமாக இருப்பதைப் போலவே பின்னும் பிரமாதமாக இருக்கும். "ஏழுகடலுக்கப்பால் இருக்கிற சொர்ண பூமியில் முளைக்கிற தங்கத்தாமரையைப் பறித்துவர இராஜ குமாரன் கிளம்புகிறான்" என்றால் அங்கு போய் அந்த இராஜ குமாரன் வீரதீரபராக்கிரமச்செயல்களைப் புரிந்து தங்கத் தாமரையைப் பறித்து வந்தான் என்று கதைமுடியும். நமக்குக் கிடைத்திருக்கிற "டி. டி. கே தூது" இங்கு இருக்கிறவரை அவருடைய வீரதீரபராக்கிரமங்களைப் பற்றி பாடுகிறதே தவிர, அங்குபோனதும் வீரதீரம் எல்லாம் அடங்கி கெஞ்சலும் அழுகையும்தான் மிஞ்சியிருக்கின்றன! ஏழுகடல் கடந்து அமெரிக்கா எனும் சொர்ணபூமியில் முளைத்திருக்கிற தங்கத் தாமாரையை அவரால் பறித்துவர முடியவில்லை! தங்கத் தாமரையைக் கொண்டு வருவதாகக் கிளம்பியவர், தங்கத் தாமரையைக் கொண்டுவராமல், குட்டையைக் குழப்பிச் சேற்றைப் பூசிக்கொண்டு திரும்பி வந்திருக்கிறார்!

இங்குதான் இவர் "இராஜாக்களுக்கெல்லாம் இராஜா, முதலாளிகளுக்கெல்லாம் முதலாளி!" என்று விருது பாடப்பட்டார். அங்கு "தாசனுதாசனுக" தண்டம் போட்டிருக்கிறார். என்ன செய்தும் தட்டில் காலணு—ஒரு நாய்ப் பைசா கூட விழவில்லை!

ஐந்தாண்டுத் திட்டத்துக்கு வேண்டிய பணத்தை அமெரிக்காவில் போய் அள்ளிவருபவர் போல, திருவள்ளூர் தட்டை கிருஷ்ணமாச்சாரியார் சென்றார்! அப்படி அள்ளி வந்து விடுவார் என்றுதான் காங்கிரஸ்காரர்கள் சொன்னார்கள், காங்கிரசுப் பத்திரிகைகள் எழுதின, மக்களும் நம்பினார்கள்!

எதிர்பார்த்தார்கள், ஏராளமாக எதிர்பார்த்தார்கள், கடைசியில் ஏமாற்றம், பெரியஏமாற்றம்! ஒன்றும் கிடைக்காமல் டி. டி. கே திரும்பியிருப்பதைப் பற்றி காங்கிரசுப் பத்திரிக்கைகளே கேலி செய்யத் தொடங்கி விட்டன! பெட்டியைத் தலை

(12-ம் பக்கம் பார்க்க)

# "இந்தித் திணிப்பை எதிர்ப்போமாக!"

—o—

## மொழியின்மூலம் ஒரு பகுதி மற்றொரு பகுதியை ஆளப்பார்க்கிறது.

—(o)—

### சி. ஆர். கருத்துரை.

[சென்னை ஒய். ஐ. எம். ஏ. சார்பில் 23—10—57 நடைபெற்றக் கூட்டத்தில், திரு. சி. இராசகோபாலாச்சாரியார் "அரசாங்க மொழி" பற்றி பேசிய பேச்சின் இரண்டாவது பகுதி இங்கு வெளியிடப்படுகிறது. முதல் பகுதி சென்ற வார "மன்றம்" இதழில் வெளியாகியுள்ளது.]

"இந்தியாவில் இந்தி பேசுபவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்று பார்த்தால், உத்தர பிரதேசத்திலும் மத்திய பிரதேசத்திலும் பெரும்பாலாக இருக்கிறார்கள். அந்த இடத்தில்தான், ஏதோ ஒரு வகையான இந்தியை மக்கள் பேசுகிறார்கள். அந்தப் பகுதிக்குக் கிழக்கில் வங்காளத்தில் இந்தி பேசப்படவில்லை. மேற்கில் மராத்தியும் குசராத்தியும் பேசப்படுகின்றன, அங்கும் இந்தி இல்லை. தெற்கில் வந்தால், உங்களுக்கு நன்றாகத் தெரியும், திராவிடம் இருக்கிறது, இங்கு திராவிட மொழிகளான தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் பேசப்படுகின்றன, இங்கும் இந்தி இல்லை. மற்றப் பகுதிகளில் தனித்தனியாக இருப்பவர்களை விட, இந்தி பேசுகிறபகுதியில் அதிகமானவர்கள் இருக்கிறார்கள் என்பது மட்டும் தெரிகிறது. நாகபுரிக்குத் தெற்கில் குமரிமுனைவரை இருக்கும் பகுதியில் இந்தி பேசப்படவே இல்லை, இந்த இடம் சிறியஇடம் அல்ல, மிகப்பெரிய நிலப்பரப்பு உடையது. இந்தியை நாம் மட்டும் எதிர்க்கவில்லை, வங்காளத்திலிருப்பவர்களும் எதிர்க்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் நம்மைவிடக் கடுமையாக அவர்கள் எதிர்க்கிறார்கள். இன்னும் அதிகமான கண்காணிப்புடனும் எச்சரிக்கையுடனும் அவர்கள் இருக்கிறார்கள். இந்திக்கும் வங்காள மொழிக்கும் அதிக வேறுபாடு இல்லை என்று சொல்வார்கள். இருந்தபோதிலும், இந்தி வருவதை வங்காளிகள் ஒத்துக்கொள்ளவில்லை. கன்னட மொழிக்கும் தமிழ்மொழிக்கும் அதிக ஒற்றுமை இருக்கிறது, அந்தக் காரணத்தைச் சொல்லி கன்னட மொழி பேசுபவர்களின் மீது தமிழைக் கட்டாயப்படுத்தினால், அது நியாயமாகுமா? சிறுவேறுபாடு என்றால்கூட, அந்தமொழி வேறொரு மொழியாகிவிடுகிறது. சிறுவேறுபாடுகள்கூட உச்சரிப்பு முறைகளுடன் சேர்ந்து ஒருமொழியை மற்றொரு மொழியிடமிருந்துபிரித்து காட்டுகின்றன. அதனால்தான், சிறிது மாறுபாடு என்றால்கூட, வங்காளிகள் இந்தியை ஏற்க மறுக்கிறார்கள். கட்டாயமாக திணிக்கப்படுவதற்கு எதிர்ப்புணர்ச்சியுடன் மராத்தியர்களும் குசராத்தியர்களும் இல்லை. அதற்குக் காரணம், அவர்களுக்குள் இருக்கிற மற்ற சச்சரவுகள் அவர்களுடைய கவனத்தை கவர்ந்திருக்கின்றன, பல இடங்களில் கவனத்தைப் பிரித்து வைத்தால், பொதுவாகபெரிய ஆபத்தை எதிர்த்துப்போராட முடியாமல் போய் விடுகிறது. அதைப்போல இங்கும் ஏற்படாமல், இந்திக்கு எதிராகப் போராட நமது சக்திகளையெல்லாம் ஒன்றுதிரட்டி வைக்க வேண்டும்.

இந்தி பேசுபவர்கள் பெரும்பான்மையினர் என்று கூறுவது அபத்தமாகும். உதாரணமாக, தமிழ்நாட்டில் 100-க்கு 30 பேர்களும், கன்னட மாநிலத்தில் 100-க்கு 40 பேர்களும், மத்திய பிரதேசத்தில் 100-க்கு 50 அல்லது 80 பேர்களும் இந்தி பேசுபவர்களாக இருந்தாலும், இந்தி வருவதற்கு ஒரு வகையில் சமாதானம் கூறலாம். நமது மாநிலத்தில் 100-க்கு 30 பேர்கள் இந்தி பேசுபவர்களாக இருந்து, அகில இந்தியாவில் இந்தி பேசுவோர் தொகை அதிகமாக இருந்தால், இந்தி வருவதை ஓரளவுக்கு நாம் ஒத்துக்கொள்ள முடியும். அப்பொழுது அகில இந்தியாவில் பெரும்பான்மை என்பதற்கு மதிப்புத் தரலாம். ஆனால் நிலைமை அப்படியில்லை. இந்தியைப் பொறுத்தவரை தென்னாடு ஒரே சூன்ய பிரதேசமாக இருக்கிறது. நாகபுரியிலிருந்து தெற்கே குமரிமுனை வரை இந்திக்குச் சூன்யமான — இந்தி என்றால் ஏதும் தெரியாத பகுதி இருக்கிறது. அப்படியிருக்கும் பகுதியிலுள்ளவர்களாகிய நாம், இந்தி பெரும்பான்மையினர் மொழி என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்தியைக் கொண்டு வருவதற்கு இரண்டாவது காரணமாக அவர்கள் சொல்வது இந்த நாட்டில் பேசப்படுகிற மொழி ஒன்றுதான் இந்த நாட்டின் அரசாங்க மொழியாக வேண்டுமென்பது. இந்தக் காரணமும் சரியானதா என்று பார்க்கலாம். ஆங்கிலம் இருக்கக்கூடாது என்பதற்கு எதிராக இந்தக் காரணத்தை வைக்கிறார்கள். இந்தி இந்த நாட்டு மக்களில் பலரால் பேசப்படுகிற மொழியானதால், ஆங்கிலத்துக்குப் பதிலாக இந்திதான் வரவேண்டுமென அவர்கள் வாதாடுகிறார்கள், முதலில் நான் சொன்னபடி, இது ஒரு அபத்தமான காரணம். இந்தி அரசாங்க மொழியாக வந்துவிடுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்பொழுது நாகபுரிக்குத் தெற்கில் குமரிமுனை வரைப் பரந்து கிடக்கும் தென்னாட்டில், இந்தி பேசுகிறவர்கள் இருக்கிறார்களா? இல்லை. ஆக தென்னாட்டில், மக்களால் பேசப்படாத மொழி அரசாங்க மொழியாக இருக்கும். அரசாங்க மொழியாக வருகிற இந்தி, மற்ற பகுதிகளில் வேண்டுமானால் பேசப்படுகிற மொழியாக இருக்கலாம். ஆனால் தென்னாட்டைப் பொறுத்தவரை, அந்த நிலைமை இல்லை. இங்கு, அரசாங்கமொழி மக்கள் பேசுகிற மொழிகளில் ஒன்றாக இல்லை. ஆக ஒரு நாள் திடீரென்று எதேச்சாதிகாரமான முறையில் இந்தி திணிக்கப்பட்டால், தபால் தந்தி நிலையங்களில், இரயில்வேயில், இன்சூரன்சு அலுவலகங்களில், எல்லாவற்றிலும் இந்தி கட்டாயமாக வந்துவிடும். இரயில்வே அட்டவணை இந்தியில் இருக்கும். இங்கிருப்பவர்கள் யாராவது கொழும்புவுக்கோ, கோழிக்கோட்டுக்கோச் செல்லவேண்டுமென்றால், அந்த இந்தி அட்டவணையைப் பார்த்துதான்தெரிந்துகொள்ளவேண்டும். இவருக்குத்தான் இந்தி தெரியாதே, என்ன செய்வார்? இந்தி பிரசார சபைக்குப் போய் தெரிந்து கொள்ளவேண்டும், அல்லது பிரயாணத்தை 1965-க்கோ 1990-க்கோ ஒத்திப் போட்டு விடவேண்டும்! இந்தி அரசாங்க மொழியாகி விட்டால், என்னென்ன அலங்கோலங்கள் நேரிடும் என்பதை நம்மால் எண்ணிப் பார்க்கக்கூட முடியவில்லை. இப்பொழுது இருப்பதே, மேல் மூச்சு வாங்குகிற நிலை. இந்த நிலையில் மூச்சு விட முடியாமல் அழுத்தப்பட்டால் எப்படியிருக்கும்? நம்மை ஒருவர் தண்ணீருக்குள் அமுக்கி மேல் வர முடியாமல் அழுத்திக் கொண்டால், அப்பொழுது தெரியும் மூச்சுத் திணறி கொல்லப்படுவது என்றால் என்ன என்று. இப்பொழுது உங்களுக்குப் புரியாமலிருக்கலாம்.

மத்திய அரசாங்கத்திலும் மாநில அரசாங்கங்களின் இடையேயும் இந்தி கட்டாயமாக அமுலாக்கப்பட்டுவிட்டால் எந்தவிதமாக இருக்கும் என்பதை உங்களில் பலரால் இப்பொழுது நினைத்துப் பார்க்க முடியாது. உதாரணத்திற்கு ஒரு நிலைமை ஏற்படுவதை எண்ணிப் பாருங்கள். திடீரென்று ஒரு நாள் காலையிலிருந்து ஆங்கில செய்தித்தாள்கள் எல்லாம் நின்று விடுவதாக வைத்துக்கொள்ளுங்கள். என்ன நேரிடும்? அந்தந்த வட்டாரத்திலுள்ள தாய்மொழிப் பத்திரிகைகள் மட்டும் வரும். சென்னையில் வெளியாகும் பத்திரிக்கையை சென்னையில் இருப்பவர்கள் மட்டும் படிப்பார்கள், சென்னையில் வெளியாகும் பத்திரிக்கையை வங்காளத்தில் இருப்பவர்கள் படிக்கமாட்டார்கள். ஒவ்வொரு பகுதியிலிருப்பவர்களுக்கும் மற்ற பகுதியிலிருப்பவர்களைப் பற்றி எதுவும் தெரியாத நிலை உண்டாகும். இந்த இருட்டடைப்பு-இருண்ட சூழ்நிலை ஆங்கிலம் போய் இந்தி வந்தால் நிச்சயம் உண்டாகும். பத்திரிக்கைகளைப் பொறுத்த மட்டில் இந்த நிலை உண்டாகுமென்றால், எல்லா அரசாங்கத் துறைகளிலும் அலுவலகங்களிலும் இந்தி பரவுமென்றால் எவ்வளவு பயங்கரமான இருள் சூழும் என்பதை எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்!

மத்திய அரசாங்கத்தில் இருக்கும் ஒரு அதிகாரி என்னிடம் ஒரு சமயம் ஒரு வேடிக்கையைச் சொன்னார். எல்லா அரசாங்கக் கணக்குகளையும் வரவு செலவு விவரங்களையும் இந்தியில் எழுத மத்திய பிரதேசமும் உத்தரபிரதேசமும் முடிவு செய்தார்கள். ஆனால் வரவு— செலவுகளை ஆராய வேண்டிய மத்திய அரசாங்கத்து ஆடிட்டர் ஜெனரலுக்கு ஒரு சங்கடம் வந்தது. அந்த ஆடிட் (கணக்குத் தணிக்கை செய்யும்) இலாகாவில் இருப்பவர்களில் பலருக்கு இந்தி தெரியாது. இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இந்தியில் கணக்கு விவரங்கள் எழுதப்பட்டால், அவற்றை நாங்கள் எப்படிப் புரிந்து கொண்டு பரிசோதிக்கமுடியும் என்று ஆடிட்டர் ஜெனரல் கவலைப்பட்டார். அவர்களால்தான் என்ன செய்யமுடியும் இந்தியில் இருப்பதை இந்தி தெரியாதவர்கள் எப்படி பரிசீலிப்பது? 'இந்தியில் இருக்கும் கணக்கைப் பரிசீலனை செய்யாமலே விடவேண்டியது தான்!' இப்படி விட்டுவிட்டால் என்ன நேரிடும்? இந்தியில் பொய்க்கணக்கு வளரு

(9-ம் பக்கம் பார்க்க)

சிறுகதை

# திருந்தியவன்

(சி. கலைச்செல்வன்)

பரமானந்த அடிகள் பாலையூர் வட்டாரத்திலேயே, பரமசிவன் அவதாரம்என்றுபுகழப்பட்டார். உடலிலே காவி உடைதான் காட்சியளிக்கும். உத்திராட்சக் கொட்டை அவர் கழுத்தைச் சுற்றியிருக்கும்! கையிலே கமண்டலம்! மற்றொருகையிலே காசிமாலை! நெற்றியிலே திருநீர்! அதன் மத்தியிலே சந்தனத் திலகம்! அமருவதோ புலித்தோல்! அவர் அருள் வேண்டி வராதவர்கள் அந்த வட்டாரத்திலே இல்லை. பரமானந்தர் பருகுவதோபால்! பக்கத்தில் இருந்து பணி செய்வதோ பாவை! மடாலயமோ மாடமாளிகை! ஆனால் அவர் முற்றிலும் துறந்த முனிவர்களுக்கெல்லாம் முதல்வர். பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை, மூன்றையும் இழந்தவர், இருப்பதோசொர்க்கபுரி.

அவர் புகழ் பரவுவதற்குக் காரணம், திவான் பகதூர் திரவியம் பிள்ளைதான். ஊரிலே கடவுள் பக்தி குறைந்து விட்டது. நாஸ்திகம் வளர்ந்து விட்டது. ஆசையால் பரமசிவனே பரமானந்த அடிகள் அவதாரம் எடுத்து,பக்தியைப்பரப்ப வந்திருக்கிறார் என்று திவான் கதை கட்டிவிட்டார். யார் நம்பமாட்டார்கள்! ஊரின் பெரிய மனிதர்! திவான் பட்டம்பெற்றவர் கூறும் பொழுது மக்கள் மதி இழந்து மடாலயத்தைத்தேவாலயம்என்று கருதினார்கள்.

பரமானந்த அடிகள் பக்திமார்க்க சங்கம் ஒன்று நடத்தி வந்தார். சங்கத்திற்கு தலைவர் திரவியம்பிள்ளை என்றால் பணத்திற்குக் கேட்க வேண்டுமா? பரமானந்த அடிகளைத் தரிசித்து, திருநீர் வாங்க மக்கள் வரிசைவரிசையாகப் புறப்பட்டார்கள். அவர் திருநீர் போட்டால் எந்த வியாதியும் பஞ்சாய்ப் பறந்து விடும் என்ற நம்பிக்கை மக்கள் மனதில் வேருன்றி விட்டது. அந்த நஞ்சு வேர் வெட்டப்பட்டால் தான் நாடு நலம்பெறும். நாட்டு மக்கள் முன்னேற்றமடைவார்கள் என்ற நல்லெண்ணம் கொண்டவர்கள் சிலர்தான் இருந்தார்கள். அவர்களின் தலைவன் தான் முத்துமணி.

சுயநலத்திற்காக எல்லோரும் தான் வாழ்ந்தார்கள் இறந்தார் எப்படியாவது எந்தத்தொழில் செய்தாவது பிழைத்து விடவேண்டும். சாப்பாட்டைத் தேட எந்த முறையைப் பின்பற்றினாலும் என்ன என்பவர்கள் ஏராளம். சமுதாயத்தைச் சாடியிருக்கும் சாதி, மதம், மூட நம்பிக்கை முதலியவற்றைச் சாக்காட்டிற்கு அனுப்பித் தன்மானத்துடன் மக்கள்பகுத்தறிவோடு வாழ ஒரு வழிகாட்டியாக! மாலுமிக்கு ஒரு கலங்கரை விளக்காக, பாலைவன ஒட்டக வியாபாரிக்கு ஓர் விடிவெள்ளியாக, மக்களுக்காக வாழவேண்டும் என்று முடிவு செய்தான். அஞ்ஞானத்தில் அடர்ந்திருக்கும் மக்களுக்கோர் அறிஞனாக! கண்மூடிக் கொள்கைகளில் கருத்தைச் செலுத்தும் மக்களுக்கோர் கலைஞனாக! புல்லுரிவிக் கொள்கைகளில் நம்பிக்கை வைத்திருக்கும் மக்களுக்கோர் புரட்சிக் கவிஞனாக! சீர்குலைந்த நாட்டைசீர்திருத்த ஓர் சிந்தனை சிற்பியாக! அறிவொளியை அணைத்து விட்டு மேலுலக நரகங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் நாட்டு மக்களுக்கோர் நாவலராக! வாழ்ந்தான் முத்துமணி.

முத்துமணி, திவான் திரவியம் பிள்ளையின் ஒரே மகன். சேற்றிலே செந்தாமரை! முள்ளில் ரோஜா! இருப்பதுபோல் திரவியம்பிள்ளையின்மகன் முத்துமணி தோன்றியிருக்கிறான். எல்லோருமே ஆக்சரியப்பட்டனர். ஒரே குடும்பத்தில் கிழக்கும், மேற்குமாக இருக்கிறார்கள் என்று, முத்துமணி ஊரில் பகுத்தறிவு பிரச்சாரம் செய்வது அவன் தந்தைக்குப் பிடிக்கவில்லை;

திரவியம் பிள்ளை சோபாவில் உட்கார்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு இருந்தார். வேலைக்காரன் சிங்காரம்,புராண புத்தகங்களை அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்தான்.

"டேய்! சிங்காரம், கணபதி எங்கடா காணோம்?" என்றார் "அவர் எப்படிங்க வருவாரு? கோயிலிலே இருப்பாரு,' என்றான் சிங்காரம்.

"டேய்என்னடாசொன்னே?" இது திவான்

சிங்காரம் அவர் போட்ட சப்தத்தில் பயந்துபோனான் "என்னங்க"? என்றான்.

"என்டா! கோயிலிலே இருக்கிற சாமியவா கேட்டேன்? நம்ம பக்திமார்க்கச் சங்கக்காரியதரிசி எங்கடான்னா?" என்று கூறிக்கொண்டு, வெற்றிலையில், சுண்ணாம்பைத் தடவினார்-

"அவரூங்க! ஆசிரமத்திற்குப் போய்விட்டு வருகிறேன். என்று போயிருக்கார்" என்றான் சிங்காரம்

முத்துமணி மாடியில்இருந்து இறங்கி வந்ததும் அவனைக் கூப்பிட்டார் திவான்.

"டேய்! நீதானே ஊரிலே, பக்திமார்க்கச் சங்கத்தை எதிர்த்துப் பிரச்சாரம் செய்யுறே" என்றார் திரவியம் பிள்ளை.

"ஆமாம் அப்பா! நான் தான், நல்லதொரு கருத்துக்களை நாட்டுமக்களுக்கு எடுத்துக்கூற நான் பயப்பட மாட்டேன்"

"உம் - அவ்வளவுக்கு ஆகிப் போச்சா, டேய்! இந்தநிமிஷத்தில் இருந்து இனிமேல்நீ ஏதாவது பகுத்தறிவு, அது இதுன்னு பேசின! உன் பங்கைப் பிரித்து விடுவேன்!" என்று சொல்லிவிட்டுப் போய் விட்டார்.

முத்துமணிக்குத் தந்தையை விட்டுப் பிரிந்து வர மன வருத்தந்தான். கொள்கை ஓர் புறம் குடும்ப பாசம் ஓர்புறம். கொள்கை பலருக்கு. குடும்ப பாசம் சுயநலத்திற்கு என்று முடிவு செய்தான். தந்தையிடமிருந்து பிரிந்துபோனவனுக்கு அவன் தாத்தா சொத்துதான் கிடைத்தது. அதுவே அவன் பகுத்தறிவுக்கு மூலதனம். தனியாக இருந்து 'பகுத்தறிவு' என்று பத்திரிகை ஒன்று ஆரம்பித்தான். 'பகுத்தறிவு' பத்திரிகை பாலையூர் மக்களின் இதயத்தைக் கவர்ந்தது. புதயலைக் கண்டவன், புன்சிரிப்பு சிரிப்பது போல் முத்துமணியின் பகுத்தறிவுக் கண்டதும், அவன் அறிவைப் பாராட்டினார்கள். பகுத்தறிவுப்பாசறையில் உருவானவர்களில் முக்கியமானவர்கள் வாலிபர்கள்.

பகுத்தறிவுக் கழகம், பக்திமார்க்கச் சங்கத்திற்கு எதிரி. இந்தப் பையன்களை வளரவிட்டால் தனக்கே ஆபத்து மக்கள் பக்தியை மறந்து விடுவிவார்கள், நாட்டிலே நாஸ்திகம் தோன்றிவிடும் இதை எப்படியாவது ஒழித்து விடவேண்டும் என்று முடிவு செய்தார் பரமானந்த அடிகள். அவர் சிந்தனையில் அமுதா வந்ததைக்கூட மறந்து விட்டார் பால் பழத்தை பருகுவதற்கு முன் 'எங்கே ஒரு......' என்று இழுத்தார். "இச்'! என்ற ஒலிதான் கேட்டது. சிஷ்யர்கள் பிரச்சாரத்திற்குப் போய்விட்டார்கள். ஆசிரமத்தில் அமுதா பரமானந்த அடிகள்தான். வாழப்பிரியப்பட்டாள்: வேலைக்கென்று அமர்ந்தவள். பரமானந்த அடிகளின் வெள்ளாட்டியாகிவிட்டாள். முதலில் அமுதா பயந்தாள். முற்றிலும் துறந்தவரா! என்று ஆச்சரியப்பட்டாள் வயிற்றைவளர்ப்பதற்குமானத்தை இழந்தாள், இரண்டு ஆண்டுகளாக பரமானந்தரின் இன்பவல்லியாக இருந்தது ஆசிரமத்தில் யாருக்குத் தெரியும்?

பகுத்தறிவு பத்திரிகைக்கு முத்துமணி 'மூட நம்பிக்கை' என்றொரு கட்டுரை எழுதிக் கொண்டிருந்தான். தபால்காரன் கடிதம் ஒன்றை வைத்துவிட்டுப் போனதைக்கூட கவனிக்கவில்லை. கட்டுரை முடிந்து பேனாவை மேஜையில் வைத்துவிட்டுக் கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

"அன்புள்ள அத்தானுக்கு திலகவதி வணக்கத்துடன் எழுதியது

நீங்கள் கல்லூரி படிப்பை முடித்துக் கொண்டு போனதிலிருந்துஎனக்கு மனநிம்மதியே இல்லை. நானோ பரிமளா அனாதைஆசிரமத்தில் இருந்து படித்து தாங்கள் உதவியால் கல்லூரி படிப்பையும் முடித்துவிட்டு, பரிமளா ஆஸ்பத்திரியில் நர்சாக இருக்கிறேன். நானோ, தாய், தந்தை உற்றார் உறவினர் இல்லாதவள்எல்லாவற்றிற்கும் உங்களையே நம்பியிருக்கும் எனக்கு என்றுஅந்த நாள் வருமோ? என் தந்தை சிறு வயதில் என்னை ஆசிரமத்தில் சேர்த்து விட்டு ஒரு ஆசிரமப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு ஓடியவர் இதுவரை திரும்பவில்லை, என்பது உங்களுக்குத் தெரியும். நமது திருமணத்திற்குள் அவரைப்பார்த்துவிட வேண்டும். இருக்கிறாரோ இல்லையோ தெரியவில்லை. சென்னை வாழ்க்கை எனக்கு அலுத்து விட்டது. கிராம வாழ்க்கை எப்போது ஆரம்பமாகும் என்று ஏங்கிக் கொண்டு இருக்கிறேன். உங்கள் கடிதத்தை உவகையுடன்

எதிர்பார்க்கும்
திலகவதி.

கடிதத்தை வைத்து விட்டு கட்டுரையைத் திருப்பி திருப்பி படித்தான். அச்சு கோர்க்கும் பையன் தயாராக கட்டுரைக்காக காத்துக் கொண்டிருந்தான்,

பரிமளா அனாதை ஆசிரமத்தில், திலகவதியைச் சேர்த்து விட்ட அவள் தந்தை சென்னைக்கு பக்கத்தில் உள்ள ஒரு கிராமவாசி பட்டணத்தில் வேலை பார்த்துச் சாப்பிடலாம் என்று நினைத்து சென்னைக்கு ஆறு வயதான தன் பெண் திலகாவைக் கூட்டிக்கொண்டு வந்தான். ஆசிரமத்தில் திலகாவைச்சேர்த்துவிட்டுபட்டணத்தில் கூலி வேலை பார்த்துக் கொண்டு இருந்தான். அதிர்ஷ்டப்ரைஸ் ஒன்றில் அவனுக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்தது, அன்பு கொண்டிருந்த ஆசிர

வேலைக்காரியைக் கூட்டிக் கொண்டு பட்டணத்தை விட்டு ஓடி விட்டான்.

பல நாட்களுக்குப் பின் திலகாவிற்கு ஒரு கடிதம் வந்தது.

"அன்புள்ள திலகாவிற்கு உன் தந்தை எழுதியது, நீ ஆசிரமத்தில் இருந்து படித்து அங்கேயே உன் எதிர்கால வாழ்க்கைக்கு வேலையைத் தேடிக்கொள். நான் எங்கு போகிறேன் என்று எனக்குத் தெரியாது. தாய் இல்லாத உன்னை சென்னையிலேயே விட்டுவிட்டு, ஓடிவந்து விட்டேன் அதை எண்ணும் பொழுது எனக்கே வெட்கமாகத்தான் இருக்கிறது. என்னைப் பற்றிக் கவலைப்படாதே. எந்த வகையிலும் நான் பிழைத்துக்கொள்வேன்'', என்று எழுதியிருந்த கடிதத்தைத் திலகாஒரு நாள் முத்துமணியிடம் காண்பித்து இருக்கிறாள்.

திவான் திரவியம் பிள்ளை தலைமையில் பக்தி மார்க்கச் சங்கக் கூட்டம் பாலையூர் மந்தைக் கோயில் மைதானத்தில் நடந்தது. கூட்டத்தில் கூடி இருந்தவர்களில் பெரும்பாலும் வேடிக்கைப் பார்க்க வந்தகுழந்தைகள் தான் அதிகம், ஆங்காங்கே, சில பெரிய மனிதர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். பெரிய மாலை ஒன்றை பரமானந்த அடிகள் திவானுக்குப் போட்டார், திரவியம் பிள்ளை தலைவர் முன்னுரையில் பேசியதும் பரமானந்த அடிகள்

"தலைவர் அவர்களே! பக்த கோடிகளே! உங்கள் அனைவருக்கும் நமஸ்காரம், நமது ஊரிலே ஏன்? தமிழ் நாட்டிலே பக்தி குறைந்து கொண்டு வருகிறது. நாஸ்தீகவாதிகள் பெருத்து விட்டார்கள். இது நாட்டுக்கேஆபத்து. கடவுளைத் திட்டுகிறவர்கள் நரகத்தைதான் அடைவார்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்டவர் தான் ஆண்டவன். என்போன்ற பக்திமான்கள் அவருடன் பேசி இருக்கிறோம்: இறந்தவர்களின் ஆவிகளுடன் பேசலாம்- இது ஆண்டவன் எங்களுக்களித்த சக்தி. அவன் இல்லாமல் அணுவும் அசையாது. சிலர் கேட்கிறார்கள் கடவுளைக் காட்டு என்று. அவர்களைக் கேட்கிறேன்! மனது என்று ஒன்று இருக்கிறதுஎன்கிறோம். அதை நாஸ்தீகர்கள் காட்டினால் நான் கடவுளைக் காட்டுகிறேன்.

—பேசி முடிப்பதற்குள் ஒரு வாலிபன் எழுந்து மேடையை நோக்கி வந்தான்.

"மனது :என்பதை நாங்கள் உருவங்களாக வைத்து பூசிக்கவில்லை. அதற்குத் தேங்காய் பழம் வைத்துக் கும்பிடவில்லை. தேர் திருவிழா நடத்தவில்லை. நீங்கள் கடவுளுக்குச் சிலை வைக்கிறீர்கள். திருவிழா நடத்துகிறீர்கள்'' என்றதைக் கேட்ட பரமானந்தர் ஒடுங்கிப் போய்விட்டார். பக்தர்கள் சிலர் ஓடி அந்தவாலிபனை உட்காரச் சொன்னார்கள். அவன் "நான் நேரடியாக நின்று கேட்கிறேன். விவாதத்துக்கு என்னுடன் வரட்டும்'' என்றான். இதற்குள் கூட்டத்தில் குழப்பம் உண்டானது. போலீஸ்காரர்கள் வந்து அமைதிபடுத்தினர். கூட்டத்தை அத்துடன் முடித்து விட்டு பரமானந்தர் பெரிய ஏமாற்றத்துடன் ஆசிரமத்திற்குப் போய்விட்டார்.

முத்துமணி, திலகாவை வரச்சொல்லி கடிதம் எழுதினான். திலகா ஆஸ்பத்திரியில் லீவு எடுத்துக் கொண்டு பாலையூர் வருவதற்குச் சென்னையிலிருந்து புகைவண்டி ஏறினாள் திருச்சி வந்ததும் அவள் இருந்த வண்டியில் ஒரு பிச்சைக்காரி ஏறினாள். கையிலே ஒரு சட்டி, கிழிந்தஉடையுடன் காட்சியளித்த அவளைப் பார்த்ததும் திலகாவிற்கு அவள்ஏன் இப்படி ஆனாள் என்று கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் உண்டானது.

"ஏம்மா! நீ ஏன் பிச்சை எடுக்கிறாய்? ஏதாவது வேலை பார்த்தால் என்ன?'' என்றாள் திலகா.

"அதை ஏனம்மா கேட்கிறீங்க? என் வாழ்க்கை ஒரு கதை.'' என்றாள் பிச்சைக்காரி

"சும்மா:சொல்லம்மா. வண்டியில் நீதானே எனக்கு பேச்சுத்துணைக்கு. உன் கதையை யாவது கேட்கிறேன்.'' இது திலகவதி.

"நான் பட்டணத்தில் ஒரு ஆசிரமத்தில் வேலை பார்த்து வந்தேன். அங்கே ஒருத்தன் ஆனந்தன் என்கிறவன்,ஆசை வார்த்தைகளைச் சொல்லி என்னைக் கூட்டிக்கொண்டு வந்தான். அவனும் எங்கிட்டே ஒரு வருஷமாய் நல்லாப் பழகினான். ஊரை விட்டு என்னைக் கூட்டிகிட்டு வந்து நாலு வருஷமாய் கூலிவேலை பார்த்து வாழ்க்கைநடத்தினோம். அவன் வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் என்னை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டான். நான் குடியிருந்தக் குடிசையை விற்றுக் கடனைக் கட்டினேன், பிழைக்க வழியில்லை பிச்சை எடுத்தேன். திருச்சியிலே பிச்சைக்காரர்கள் பெருகி விட்டார்கள். மதுரைக்காவது போகலாமா என்று எண்ணிப் போகிறேன்.'' என்றாள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

திலகாவிற்கு இதைக் கேட்டதும் தன் தந்தைதான்என்று நன்றாக விளங்கி விட்டது. இருந்தாலும் காட்டிக்கொள்ளாமல்,"என்னோடு இருக்கலாம் அம்மா,'' என்று சொன்னாள், பாலையூர் வந்ததும்,பகுத்தறிவு காரியாலயத்திற்குத் திலகாவும் பிச்சைக்காரி சொர்ணமும் சென்றார்கள்.

சொர்ணமும் திலகாவும், ஆற்றில் போய், தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்தாலும். ஆசிரமத்தைக் கடந்துதான் வரவேண்டும். பரமானந்த அடிகளும், அவர் சிஷ்யன் கிருஷ்ணனும் உட்கார்ந்திருந்தார்கள். சாலையிலே போனப் பெண்களின் கூட்டத்தைக் கவனித்தார்.

"டே! கிருஷ்ணு, அதோபார்! ஒரு பச்சை வர்ண சேலை கட்டியவள் போகிறாள். அவள் நம் ஊருக்குப் புதிது. அவள் நடப்பதே தனி அழகாய் இருக்கிறது. அவளை நாளைக்கு எப்படியாவது, நமது ஆசிரமத்திற்குக் கொண்டு வந்து விட வேண்டும்,'' என்றார் பரமானந்த அடிகள்.

வழக்கம் போல் குடி தண்ணீர் குளத்திற்குச் சொர்ணத்தோடு திலகா அன்று வரவில்லை. ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்று விட்டாள். சொர்ணம் அன்று, பச்சை வர்ணச்சேலை உடுத்தித் தண்ணீர் எடுக்க வந்தாள். திலகா உடுத்திய உடைகளை, மறுநாள் சொர்ணம் உடுத்துவது வழக்கம். அதே சேலையைச் .சொர்ணம் உடுத்திக் கொண்டு, தனியாக தண்ணீர் குளத்திற்கு வந்தவளை, யாரோ துணியால், வாயைப் பொத்தியதும், மயக்கம் வந்து விட்டது பரமானந்த அடிகள் இருக்கும் அறையில் போட்டு விட்டு சிஷ்யன் கிருஷ்ணன் தூக்கி வந்த முரடர்களுக்குப் பணத்தைக் கொடுத்து அனுப்பி விட்டான். பெயருக்கேற்ற வேலையைக் கிருஷ்ணன் முடித்து விட்டான் என்று அடிகள் ஆனந்தமடைந்தார்.

சொர்ணம், இருந்த அறை இருட்டறை, கால் கைகள் கட்டப்பட்டு, வாயில் ஒரு துணி வைத்திருந்ததால், சப்தம் போட முடியவில்லை. அறையின் கதவு திறக்கப்பட்டது. ஒரு உருவம் மெதுவாக நடந்து வந்தது, வந்தவர் சொர்ணத்தின் கால்கட்டுகளை அவிழ்த்து விட்டார்.

"கண்ணே! கலங்காதே, இங்கு இருப்பது யாருக்கும் தெரியாது. என் இஷ்டத்திற்கு நீ இணங்கி விட்டால் உன் உயிர் பிழைக்கும். இல்லாவிட்டால் நீ கொலை செய்யப்பட்டு, இரவோடு இரவாக, பக்கத்தில் ஓடும் ஆற்றில் தூக்கி எறியப்படுவாய்'' என்றார் பரமானந்தர்.

"ஐயோ! என்னை விட்டுவிடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டு''—இது சொர்ணம்.

"புண்ணியமாவது, பாவமாவது, யாருக்கு வேண்டும்? உன் போன்ற அழகிகளை அனுபவிக்கத்தான் நான் இந்த வேடத்தில் இருக்கிறேன்.''

சொர்ணம் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்தாள் முடியவில்லை. சூழ்ச்சியாகத்தான் இவனை ஏமாற்றமுடியும் என்று எண்ணி, "என்னை அவிழ்த்து விடுங்கள். இரண்டு பேரும் உட்கார்ந்து பேசிக் கொண்டு இருப்போம்,'' என்றாள்.

"என் இஷ்டத்திற்கு இணங்குவதாக சத்தியம் செய்,'' இது பரமானந்தர்.

"சத்தியமாக நான் என்றென்றைக்கும் உங்களுடையவள்,'' என்றாள் சொர்ணம்.

"கட்டுகளை அவிழ்த்து விட்டதும், இருவரும் காதல்மொழி பேசிக் கொண்டிருந்தனர். இருட்டில் யார் என்று தெரியவில்லையே என்று மனம் வருத்தப்பட்டாள். யாராய் இருந்தால் என்ன? பக்கத்தில் இருந்த ஊன்றுகோலை எடுத்துத் தயாராக வைத்துக்

# குழலிற் கீறல் கூடுங் காலை...

"ரவி"

கண்ணொடு கண்ணும் கலக்காமல்—சுவை
காதற் கவிதை மலர்ந்திடுமோ?
பண்ணிற் சுதியே இணையாமல்—தனிப்
பாச உணர்வும் பிணைந்திடுமோ?
அன்பொடு பண்பும் அணையாமல்—இன்ப
ஆசை நினைவும் கனன்றிடுமோ?
வண்ண இதழ்கள் விரியாமல்—தேன்
வாச நினைவும் சுரந்திடுமோ?

பொன்னொளி நல்கும் விளக்குடைந்தால்—மண்
பொருந்தும் ஒளியும் உயிர்த்திடுமோ?
கன்றிய மேகம் பிரிந்திட்டால்—எழில்
மின்னிடும் வான்வில் சிறந்திடுமோ?
இன்னிசை மீட்டும் குழலுடைந்தால்—அதன்
இனிய ஒலியும் அலர்ந்திடுமோ?
இன்பத் தமிழ்மொழி வீழ்ந்திடவே—தமிழ்
மக்கள் புவியிடை வாழ்ந்திடவோ?

ண்டாள். பேசிக் கொண் ங்கும் பொழுதே, அடியார் ɔ எடுத்து வருவதற்கு ந்து அலமாரியைத் திறந் . திறந்து எடுத்துக் 'ண்டு திரும்பியதும் அவர் ாடையில் பலமாக அடித் ா சொர்ணம். இரண்டு டகளில் கீழே விழுந்தார் டகள். சொர்ணம் தன் கற் 'க் காப்பதற்காக, தன் முழு ) த்தையும் வைத்து ுத்து விட்டாள். பரமானந்த டிகளின் ஊன்றுகோல்தான் வளுக்குத் தக்க உதவி செய் து.

அதைக் கையில் எடுத்துக் ாண்டு, கதவைத் திறந் ாள். ஒருவன் தூங்கிக் ாண்டு வாசலில் உட்கார்ந் ருந்தான். அவனை மண்டை ல் ஓங்கி ஒரு அடி அடித் ாள். சுருண்டு கொண்டு ழே விழுந்தான். சாவி அவ டம்தான் இருந்தது. அதை டுத்துக்கொண்டு, வெளிக் தவைத் திறந்து, வெளியில் ந்து, பூட்டி விட்டாள். இர வில் போலீஸ் ஸ்டேஷனை ாக்கி ஓடினாள். அங்கே விபர ாக நடந்ததைச் சொன்னதும், த்துமணி, இன்ஸ்பெக்டர் தவியோர், சம்பவம் நடந்த இடத்திற்கு இரவு சென்று பார்த்தனர். பக்திமார்க்க சங் த் தலைவர், பரமானந்த அடி கள், உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார். விளக் கொளியில், சொர்ணம், பரமா னந்தரைப் பார்த்து விட்டாள்.

"ஐயோ நீங்களா?" என்று ஆச்சரியப்பட்டாள்.

"ஆம், சொர்ணம், நானே தான். உன்னை வஞ்சித்துத் திருச்சியில் விட்டுவிட்டு; வந்த எனக்கு உன் கையிலே தண்டனை கிடைத்தது. நான் இனி மேல் பிழைக்கமாட்டேன். நான் செய்த அட்டூழியங்களுக்குத் தகுந்த பரிசு கிடைத்தது. நான் சாவதற்குள் ஒரு முறை யாவது திலகாவைப் பார்க்க முடியவில்லையே, என்று தான் வருத்தப் படுகிறேன்," என்றார் அடிகள்.

"யார்? நம் திலகாவா? அவள் இங்குதானிருக்கிறாள்."

தகவல் தெரிந்ததும் திலகா வும் வந்தாள்.

"ஐயோ, அப்பா!" என்று திலகா அழுது புரண்டாள்.

"திலகா, அழாதே. உன்னை ஆசிரமத்தில் விட்டுவிட்டு வந்தவன், பிழைப்பதற்குத் தகுந்த வழி இந்த வேஷம் தான் என்று உணர்ந்தேன். காவி உடையும், கழுத்திலே உத்திராட்சமும், கையிலே கமண்டலமும் இருந்தால் போதும்; இந்த நாட்டு மக்கள், எளிதில் ஆண்டவன் அவதாரம் என்று நம்பிவிடுவார்கள். எதைச் சொன்னாலும் நம்பக் கூடியவர்கள் இன்றைய மக்கள். அவர்களை ஏமாற்றிய எனக்கு, இந்தத் தண்டனை போதாது. பகுத்தறிவைப் பரப்பிய முத்துமணிக்கு, நான் செய்த துரோகம்தான், எனக்கு இந்த நிலைமையை ஏற்படுத்தியது. முத்துமணி ஓர் அறிஞர். அவர்தான் உனக்கு ஏற்றக் கணவர், நீங்கள் சந்தோஷமாக இருங்கள்." என்றார் பரமானந்த அடிகள்.

என்னைப் போன்றப் போலி வேடதாரிகளுக்குக் கூறுகிறேன், "கடவுள் லோலர்களே நாம் மக்களை ஏமாற்றிய காலம் ஏராளம்! நீங்களும் என்னைப் போல் திருந்திவிடுங்கள். அறிஞர்கள் செய்த சேவையால், மக்கள் விழித்துக் கொண்டார்கள். இனிமேல் நம் போன்றவர்கள், மோட்சலோகத்திற்கு வழிகாட்ட முடியாது. சாமிகளின் பெயரைச் சொல்லி சாதுக்கள்போல் திரியும் சண்டாளர்களே! திருந்திவிடுங்கள். கடவுள் பக்தியை மூலதனமாக வைத்துக்கொண்டு, கணக்கற்ற பெண்களின் கற்பைக் கெடுக்கும். கடவுள் சீடர்களே! திருந்தி விடுங்கள். ஆண்டவன் பெயரைச் சொல்லி, மக்களைக் கை பொம்மைகள் போல் ஆட்டி வைக்கும், அக்கிரமக் காரர்களே! திருந்தி விடுங்கள். பக்தியைக் காட்டி, பாமர மக்களை ஏமாற்றும் எத்தர்களே' திருந்தி விடுங்கள். சாதி மதத்தை உண்டாக்கி, மக்களைப் பிரித்து வைத்திருக்கும் சண்டாளர்களே! திருந்திவிடுங்கள். கற்சிலைகளில் கடவுள் இருக்கிறார் என்று ஊராருக்கு உபதேசம் செய்து, மக்கள் உதிரத்தை உறிஞ்சும் உலுத்தர்களே! திருந்தி விடுங்கள். இக் கற்ற மக்களின் வாழ்விற்குத் திசை காட்டாமல், திவ்விய க்ஷேத்திரங்களுக்கு வழி காட்டுபவர்களே! திருந்தி விடுங்கள். மூட நம்பிக்கைகளை மக்கள் முன் நிறுத்தி, அவர்கள் வாழ்க்கையை முன்னேறச் செய்யாமல், தடைசெய்த பாவிகளே! திருந்தி விடுங்கள். பேய் பிசாசு என்று கூறி, மக்களைப் பயமுறுத்தி வைத்திருக்கும் பித்தர்களே! திருந்தி விடுங்கள். நல்ல தமிழ் இலக்கியங்கள் இருக்க, புராணக் கதைகளைக் கூறிய புல்லர்களே! திருந்திவிடுங்கள். வீரர் வழி வந்தத் தமிழர்களை, விவேகத்தால் தாழ்பணியச் செய்த விவேகிகளே! திருந்திவிடுங்கள். முற்றிலும் துறந்தவர்கள் கடவுள் சீடர்கள் என்று கூறிக்கொண்டு, மூன்று ஆசைகளையும் அனுபவிக்கும், அக்கிரமக் காரர்களே! திருந்தி விடுங்கள். அறிஞர்கள் மக்களுக்கு வழி காட்டிவிட்டார்கள். இனிமேல் ஆண்டவனுக்கு அடியார்களாக இருக்க முடியாது. பக்தியின் போதையைப் பருகி, வழி தவறிய மக்களுக்கு, பகுத்தறிவு வாதிகள் வழிகாட்டிவிட்டார்கள். இனி, என்போன்ற பரமானந்த அடிகள் பக்தி போதையைப் பாமர மக்களுக்கு ஊட்ட முடியாது, திருந்தி விடுங்கள்.

கடவுள் சீடர்களே, உங்கள் நெஞ்சிலே கை வைத்துப் பாருங்கள். நீங்கள் எத்தனை தீயக் காரியங்கள் செய்திருக்கிறீர்கள் என்பது தெரியும். திருந்தி விடுங்கள். திவ்விய க்ஷேத்திரத்திற்குப் பாதை அமைத்துக் கொடுக்கும் பக்த கோடிகளே! நான் திருந்தியவன். நீங்களும் திருந்தி விடுங்கள்.

'முத்துமணி!, நீ ஓர் உதய சூரியன், உன் போன்றப் பகுத்தறிவு வாதிகள், ஊர் தோறும் உதயமாகட்டும், அந்தப் பகுத்தறிவுப் பிரகாசத்தால், இனி மேலாவது சமுதாய இருள் நீங்கட்டும்," என்று கூறியதும், அவர் தலை சொர்ணத்தின் மடியில் இருந்து கீழே விழுந்தது.

முத்துமணிக்கும், திலகாவிற்கும் திருமணம் நடந்ததைப் பற்றிக்கூட, திவான் திரவியம் பிள்ளை சந்தோஷப் படவில்லை. தன் மகன் ஒரு பகுத்தறிவு இயக்கத்திற்குத் தலைவன் என்றதும், மகிழ்ச்சியடைந்தார். பக்திமார்க்க சங்கத்தின் பெயர் பலகை, பகுத்தறிவு சங்கமாக மாறியது. ○

# இந்தி ஆதிக்கமா?

[illegible]

## "கூடாது, கூடாது, கூடாது!"

[illegible]

### டாக்டர் சுப்பராயனின் எதிர்ப்பு.

—(0)—

23—10—57 இல் சென்னை ஒய்.ஐ.எம். ஏ சார்பில் மொழிப் பிரச்சினைபற்றி திரு. சி. இராசகோபாலாச்சாரியார் பேசிய கூட்டத்திற்கு, டாக்டர் பி. சுப்பராயன் தலைமைவகித்தார். அரசாங்க மொழிபற்றி ஆலோசனை தர நியமிக்கப்பட்ட கெர் குழுவில் டாக்டர் சுப்பராயன் ஒருவராக இருந்து, கடைசியாக கெர் அறிக்கை வெளியிடப் படும்பொழுது, அரசாங்க மொழியாக இந்தி கொண்டு வரப் படுவதை எதிர்த்து தனது கண்டனக் குறிப்பை தந்தவர் அவர். மொழிப் பிரச்சினையில் தம்முடைய கருத்தை நன்றாக வலியுறுத்தும் வகையில், சென்னையில் 23—10—57ல் தலைமை வகித்த கூட்டத்தின் இறுதியில், டாக்டர் சுப்பராயன் பேசியதாவது:

"இதுவரை இராஜாஜி சொன்ன கருத்துக்களை முழுக்கவும், நூற்றுக்கு நூறு, நான் ஒப்புக் கொள்கிறேன், ஆதரிக்கிறேன். அரசாங்க மொழிபற்றிய குழுவில் நான் இருந்த பொழுதே 'இன்னும் பல ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளவேண்டும். அரசாங்க மொழியாக இந்தி வந்துவிட வேண்டுமென்பது முடியாத எண்ணம்' என்று நான் வலியுறுத்தினேன். இந்தியைத் திணிக்க மாட்டோம் என்று பிரதம மந்திரி கூறுகிறார். அவர் சொல்வதை ஏற்றுச் கொள்ளலாம். ஆனால் அவர் உறுதிமொழி தருவதற்கு மாறுபட்டு, வடநாட்டில் பலர் மிகுந்த வெறியுடன், இந்தியைத் திணிக்கவேண்டுமென்பதில் பிடிவாதமாக இருக்கிறார்கள். என் சொந்த அனுபவத்திலிருந்து ஒன்றை ,இங்கு சொல்ல விரும்புகிறேன். அரசாங்க மொழிக் குழுவில் என்னுடன் இருந்த சிலர், கடுமையான எதிரியைப்போல என்னை பார்ப்பதும் பேசுவதுமாக இருந்தார்கள். ஏனென்றால் மொழிப் பிரச்சினையில் இந்தப் பகுதி மக்களுக்காக நான் வாதாடினேன். என்னை 'ஒரு துரோகி'யாகவே அவர்கள் நினைத்தார்கள்! வடநாட்டில் இத்தகைய வெறித்தன்மை மூண்டுள்ளது. இராஜாஜி அவர்கள் சொல்லியதுபோல, நாம் தகுந்த பாதுகாப்புடன் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்-மன உறுதியுடன், அகிம்சை முறையில், போராடவேண்டும். 'எந்த நிலைமை ஏற்பட்டாலும் சரி, இந்தி ஆதிக்கத்துக்கு பணிந்து போவதில்லை!' என்ற குறிக்கோளுடன் நாம் போராடவேண்டும். இந்தப் போராட்டில், இராஜாஜியும் நானும் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது, இதில் இளைஞர்களாகிய நீங்கள் உறுதுணையாக, உறுதியுடன் நிற்கவேண்டும். இந்தித் திணிப்பதால், இளைஞர்களாகிய உங்கள் எதிர்காலம்தான் அதிகம் பாதிக்கப் படப்போகிறது. ஆகையால், இந்தி திணிப்பதற்கு எதிராக நின்று, அது 'கூடாது, கூடாது, கூடாது!' என்று மும்முறை போர்க்குரல் எழுப்ப வேண்டும்." ○

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழல் அதிகமாகும், ஆகையால் ஆடிட் இலாகா 'இந்தியில் கணக்கு விவரங்களை வைக்கவேண்டாம்!' என்று சொல்லியது. அந்தச் சமயத்தில், நமது பிரதம மந்திரி, இந்தி வெறிக்கு ஆளாகாமல் ஆடிட் இலாகா சொல்லியதை ஒப்புக்கொண்டார். பார்க்கப்போனால் வடக்கில்நமக்கு இருக்கிற ஒரே ஒரு நிதானமானவர் அவர்தான்! அவர் சொன்ன பிறகு, ஆங்கிலத்தில் வரவு செலவு விவரங்களை எழுதும் முறை தொடர்ந்து கையாளப்பட்டது. ஒருவாறாக அப்பொழுது தப்பித்தோம்!

ஆனால் இப்பொழுது தபால் தந்தி நிலையங்களில் என்ன நடைபெறுகிறது? தந்தியடிக்கும் வேலையி லிருப்பவர்கள் இனிமேல் இந்தியில் தந்தியனுப்பும் முறையைக் கட்டாயமாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒரு புது உத்தரவு வந்திருப்பதாகப் பத்திரிகையில் படித்தேன். இனிமேல், தபால் நிலையத்தில் தந்தியடிக்கும் வேலைக்குயாராவது போவதென்றால், அவர்களுக்கு முதன் முதலில் இந்தி தெரிந்திருக்க வேண்டும். இது கட்டாயமாக திணிப்பதல்ல, மெதுவாக நுழைக்கும் முறை!

வர வர அதிகாரங்கள் எல்லாம் மத்திய அரசாங்கத்திடம் சேர்க்கப்படுகின்றன, சிறுகச் சிறுக மாநில அரசாங்கங்கள் தேய்ந்து வருகின்றன, அவற்றை யாரும் பொருட்படுத்துவதில்லை. ஏதாவது ஒரு கட்டடமோ, பாலமோ கோயிலோ, ஓட்டலோ கட்டவேண்டுமென்றால் அதற்குக்கூட மத்திய அரசாங்கத்திற்கு எழுதி அனுமதிபெற வேண்டியிருக்கிறது. இந்தி அரசாங்க மொழியாகி விட்டால், நாம் மத்திய அரசாங்கத்திற்கு இந்தியில்தான் எழுதவேண்டும். தண்ணீருக்குள் அழுத்தப்பட்டவன் மூச்சுத் திணறுவதைப் போன்ற நிலை உண்டாகும் என்பதை விளக்கத்தான் இவற்றையெல்லாம் நான் குறிப்பிடுகிறேன்.

இன்னும் சற்று விரிவான முறையில்கூட இந்தப் பிரச்சினையை நாம் கவனிக்கவேண்டும். இந்தி அரசாங்க மொழியாகி விட்டால், இந்தி தெரியாத மற்ற மொழியினர்க்கு அது பாதகமாக முடியும். இந்தி தெரியாதவர்களுக்குப் பாதகமாக மட்டுமல்ல, இந்தி தெரிந்தவர்களுக்குச் சாதகமாகவும் அது இருக்கிறது. இந்தி தெரியாதவர்கள் அவதிப்படும்பொழுது, இந்தி பேசுபவர்களுக்குப் புதிய அனுகூலம் கிடைத்து விடுகிறது. இந்தி அவர்களுடைய தாய்மொழி, அவர்களால் பேசப்படுகிற மொழி. இந்தி அரசாங்க மொழியானால், இந்தி தெரிந்தவர்களுக்குக் கொண்டாட்டம், இந்தி தெரியாதவர்களுக்குத் திண்டாட்டம்! இது முறைதானா? இப்பொழுது, எல்லோரும் ஆங்கிலத்தைப் படித்து வரவேண்டியிருக்கிறது, யாருக்கும் தனிப்பட்ட அனுகூலம் கிடையாது. இந்தி அரசாங்க மொழியானால், இந்தி பேசுபவர்களுக்கு முதலிடம் கிடைக்கும். இப்பொழுதிருந்தே நாம் எல்லோரும் இந்தி கற்றுக் கொள்ள ஆரம்பிக்கிறோமென்றால்கூட இந்தி பேசுகிறவர்களை நாம் முந்திவிட முடியாது. நம்மைவிட அவர்கள் வேகமாக தங்களுடைய இந்தி அறிவை, பெருக்கிக் கொள்வார்கள். எப்பொழுதும், எந்தக் கட்டத்திலும் இந்தி பேசுபவர்களுக்கு நம்மைவிட அனுகூலம் அதிகமாகத்தான இருக்கும், நமக்கு ஏற்படுகிற குறைபாடு வரவர அதிகமாகி, வெகு தூரத்துக்குப் பின்னால் தள்ளப்பட்டு விடுவோம். இந்தி பேசுபவர்கள் மிகுந்த வேகத்துடன் முன்னேறி விடுவார்கள். இவ்வாறு இந்தி தெரிந்தவர்களுக்கு அனுகூலமான நிலையையும், இந்தி தெரிந்தவர்கள் அவதிப்படவேண்டிய நிலையையும் உண்டாக்குவது நியாயமானதா?

இந்தி வெறியைத் தூண்டிவிடும் காரணம்—இரகசியமான காரணம் ஒன்று இருக்கிறது. தாங்கள் பேசுகிற மொழி அரசாங்க மொழியாகி விட்டால், தங்களுக்கெல்லாம் சுலபமாக வேலை கிடைத்து விடுமென்று பலர் நினைக்கிறார்கள். இது வெறும் மனப் பிரமையேயாகும். இந்தி அரசாங்க மொழியாகிவிட்டால் இந்தி தெரிந்தவர்களுக் கெல்லாம் படித்திருந்தாலும், இல்லாவிட்டாலும்—வேலைகள் கிடைக்குமென, வடநாட்டில் உள்ளவர்கள் கனவு காண்கிறார்கள். தங்களுக்கு வேலைகளும், பதவிகளும், பொருளாதார வசதியும் சுலபமாகக் கிடைத்துவிடும் என்ற தவறான நம்பிக்கைதான் வடநாட்டில் பலரை இந்தி வெறியர்களாக ஆக்கியுள்ளது. அரசாங்கம் நடைபெற வேண்டுமென்றால், படித்தவர்கள் எப்பொழுதும் வேண்டும். இந்த நிலைமை புரியாமல், இந்தி பேசுபவர்கள் அரசாங்க மொழியாக இந்தியைக் கொண்டுவருவதில் மூர்க்கத்தனமாக இருக்கிறார்கள்.

அடுத்தபடி போலிக் கௌரவத்தின் காரணமாக, அந்நிய மொழியான ஆங்கிலம் வேண்டாம், நமது நாட்டு மொழியான இந்தி வரட்டும் என்று கூறுகிறார்கள். இங்கு இருக்கும் சிலர் கூட அந்த குழப்பத்தில் இருக்கிறார்கள். 'ஆங்கிலம் நம்மை அடக்கி ஆண்டவர்களுடைய மொழி; அவர்களை விரட்டிவிட்டோம்; இனி அந்த மொழியையும் விரட்ட வேண்டியதுதான்!' என்று சொல்கிறார்கள். ஆங்கிலேயர்களுடைய உடை வேண்டியதில்லை என்று சொல்லிவிட்டோம், ஆங்கிலேயர்களுடைய தொப்பி தேவை இல்லை என்கிறோம். ஆங்கிலேயர்களுடைய உடை, தொப்பி இவைகளெல்லாம் வேண்டாமென்று உதறித் தள்ளியது போல, அவர்களுடைய மொழியையும் உதறித் தள்ளிவிடலாம் என்று நினைக்கிறார்கள். மொழி என்பது உடை, தொப்பி இவைகளைப் போன்றதல்ல. ஆங்கிலமொழி ஆங்கிலேயருடைய சொத்து அல்ல! இப்பொழுது ஆங்கிலம் நம்மிடம் இருக்கிறது, அது நம்முடைய சொத்து. ஒரு மொழியை ஒருவன் கற்றுக் கொள்ளும் பொழுது, அதில் சொத்துரிமை எதுவும் இருப்பதாக உணர்வதில்லை. மொழியைக் கற்றுக் கொண்டதும் அவன் கற்றுக் கொண்டது அவனுக்கு உரியதாகிறது. ஆங்கிலம் நமக்கு நல்லதொரு செல்வமாக வந்துள்ளது. இந்த நாட்டிலுள்ள எல்லா அலுவலகங்களிலும் சென்று கணக்கெடுத்தால், அங்கு பணியாற்றும் எல்லாதரத்தினருக்கும், பெரும்பாலாக எல்லோருக்கும் ஆங்கிலம் தெரிந்திருப்பதைக் காணலாம். இது பெரிய அனுகூலமாகும். ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு குறிப்பு, இந்த நாட்டில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு அனுப்பப்பட்டால், அதை சுலபத்தில் புரிந்து கொள்கிறார்கள்.

மக்கள் பேசுகிற மொழி அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை, மாநில அரசாங்கத்தில் அந்த மாநிலமொழி அரசாங்க மொழி ஆக்கப்பட்டால், நிறைவேறும். மத்திய அரசாங்கத்து மொழி, மாநில அரசாங்கத்து மொழியாக இருக்கத் தேவையில்லை. இந்தி அரசாங்க மொழியாக்கப்பட்டால், தென்னாட்டிலும் வங்காளத்திலும் மற்றும் சிலபகுதிகளிலும் அது மக்களால் பேசப்படுகிற மொழியாக இருக்காது. அந்த இடங்களில், இந்தி ஆதரவாளர்கள் தருகிற காரணங்கள் பொருந்தா!

அரசாங்க மொழியாக எது இருக்கவேண்டும் என்பதையும், கல்வித் துறையில் பாட மொழியாக எது இருக்க வேண்டும் என்பதையும் ஒன்றாக நினைத்துக் குழப்பிக்கொள்ளக்கூடாது. கணிதத்தையோ, விஞ்ஞானத்தையோ, எந்த மொழியில் சொல்லிக் கொடுப்பது என்பது வேறு பிரச்சினை. இவைகளைக்கூடத் தமிழில் நாம் சொல்லித் தரும்பொழுது ஆங்கிலத்திலுள்ள முக்கியமான பெயர்களையும் தொழில் நுணுக்கக் குறியீடுகளையும் முழுவதும் மாற்றிக் கொள்ள வேண்டு மென்பதில்லை. தாய்மொழியில் கற்றுக் கொடுக்கப்பட்டாலும், ஆங்கிலக் குறியீடுகளை நாம் கையாளுவதில் தவறில்லை.

ஒரு பகுதியில் மட்டும் வழங்குகிற மொழி இந்தியா முழுவதற்கும் அரசாங்கமொழியாகக் கட்டாயப் படுத்தப்பட்டால் அது ஒரு பகுதி மற்றொரு பகுதியை அடிமைப்படுத்தி ஆளுவதாக முடியும். அது ஜனநாயக முறைக்கு மாறுபட்டது. 'ஒரு வகையான பலவீனமான ஏகாதிபத்தியமாக' அது இருக்கும். 'பலவீனமான' என்று ஏன் சொல்கிறேனென்றால் என்ன செய்யப்பட்ட போதிலும், அந்த முயற்சி வெற்றியடையப் போவதில்லை. இவ்வளவு பரந்த நாட்டில் ஒரே அரசாங்கத்தின்கீழ் எல்லாவற்றையும் அடக்க முயல்வது கடினமான செயல். அதிலும் ஒரு பகுதியைச் சேர்ந்த மொழியை மற்ற பகுதிகள் ஏற்றுக் கொள்ளும்படித் தூண்டுவது இன்னும் கடினமான செயலாகும். அது ஒரு ஏகாதிபத்திய ஆட்சியின் போக்காக இருக்கும். ஏகாதிபத்திய முறையில் இருந்த ஆங்கில ஆட்சி போகும்படி நாம் வலியுறுத்தினோம். அதே முறையில் இருப்பதால் இந்தி ஏகாதிபத்தியம் என்று சொல்கிறோம். 'இந்தி ஏகாதிபத்தியம்' என்று நாம் மட்டுமல்ல, இங்குள்ளவர்கள் மட்டுமல்ல, டில்லியிலேயே அங்குள்ள பாராளுமன்றத்திலேயே சொல்கிறார்கள் 'இந்தி ஏகாதிபத்தியம்' என்று குறிப்பிடுவது வழக்கத்தில் வந்துவிட்டது.

'ஆங்கிலம் இந்த நாட்டில் காலவரையின்றி எல்லா காலத்திலும் இருக்கவேண்டியதுதானா?' என்று சில ஆர்வமுள்ள காங்கிரஸ்காரர்கள் கேட்கிறார்கள். ஏதோ 'ஆங்கிலேயன் இந்த நாட்டைஎப்பொழுதும் ஆளவேண்டுமா?' என்று கேட்பதைப்போலகேட்கிறார்கள். இந்தக் கேள்வியும் தேசிய கௌரவம் என்ற அடிப்படையில் எழுந்ததாகும். இந்தக் கூட்டத்தில்ஒருசமரசமான


கீழ்க்கண்ட ஊர்களுக்கு மன்றம் வார இதழை விற்பனை செய்ய விற்பனையாளர்கள் தேவை.

1. திருக்காட்டுப்பள்ளி.
2. திருநெல்வேலி.
3. நெல்லிக்குப்பம்.
4. பொன்னமராவதி.
5. உதகமண்டலம்.
6. நன்னியூர்.
7. சிவகாசி.
8. திருத்தணி.
9. சோளிங்கர்.
10. புதுப்பாளையம்.
11. திருவொற்றியூர்.
12. மூலனூர்.
13. கோவில்பட்டி.

விவரங்களுக்கு :

நிர்வாகி,
மன்றம்.

யாசனையைக் கூறுகிறேன், காமன்வெல்த் அமைப்பில் நாம் இருக்கிறவரை ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம்என்று! தேசிய கௌரவத்தைப் பார்க்காமல் அடக்க ஒடுக்கமாக, காமன்வெல்த் அமைப்பில் கானடா, ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா இவைகளுடன் கூட இங்கிலாந்து ராணியின் கீழ் உங்களால் இருக்க முடிகிறதென்றால், இவ்வாறு இருக்கிற காலம்வரையிலாவது ஆங்கிலத்தை வைத்துக்கொள்வதில் தவறு இல்லை. இப்பொழுது ஆங்கிலத்தை வைத்துக்கொள்வது முன்பு ஆங்கிலத்தை வைத்ததுபோலல்ல, முன்பு இங்கிலாந்திருந்த ஒரு ஆட்சி இந்தியாவின் மீது ஆங்கிலத்தைச்சுமத்தியது. இப்பொழுது நாமாக விரும்பி ஆங்கிலத்தை ஏற்றுக்கொள்கிறோம். ஆங்கிலேயர் தந்த தந்தி முறையை அப்படியே ஏற்று உபயோகப்படுத்துகிறோம். அவர்கள் வைத்துப்போன இரயில்வேக்களை உபயோகப்படுத்துகிறோம், அவர்கள் கட்டி வைத்த பாரமன்றத்தில் அவர்கள் கொடியை எடுத்துவிட்டு நமது கொடியைப் போட்டு உபயோகப்படுத்துகிறோம் ஆங்கிலேயன் விட்டுப்போன இவைகளையெல்லாம் நமது உடைமைகளாக ஆக்கிக்கொண்டு உபயோகப்படுத்தும்பொழுது ஆங்கில மொழியை மட்டும் உபயோகப்படுத்துவதில் என்ன தவறு இருக்கிறது? காமன்வெல்த் அமைப்பில் பிரிட்டனுடன் சேர்ந்து இருப்பதில் குற்றம் இல்லையென்றால், இங்கிலாந்து இராணியின் தலைமையில்இயங்கும் அந்த காமன்வெல்த் அமைப்பில் இருப்பதனால் தேசிய கௌரவம் பறிபோகவில்லையென்றால், நிச்சயமாக ஆங்கிலத்தைத் தொடர்ந்து வைத்துக்கொள்வதால் நமக்கு அகௌரவமோ அவமானமோ ஏற்பட்டுவிடாது. ஆங்கில மொழி இதுவரைப் பயன் பட்டுவந்துள்ளது. அலுவலங்களில் அதிகாரிகளிலிருந்து வேலைக்காரர்கள்வரை ஆங்கிலத்தைப் புரிந்து கொள்கிறார்கள்.

காமன்வெல்த் அமைப்பில் நாம் இருக்கும் வரை ஆங்கிலத்தை வைத்துக்கொள்ளலாம் என்று நான், ஒரு சமரசமான முறையில் தாராளமான முறையில்கூறுகிறேன். காமன்வெல்த் அமைப்பை விட்டு இந்தியா நீங்கிவிட்டால் ஆங்கிலத்தை நாம்விட்டுவிடவேண்டும் என்று அர்த்தமில்லை. அந்தச் சமயம் வரும் பொழுது ஆங்கிலம் தொடர்ந்து வேண்டுமா வேண்டாமாஎன்று ஆராயலாம். ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்பதற்கு அப்பொழுதும் நான் தக்க காரணங்கள் தரமுடியும். ஆனால் இப்பொழுது தேசியக் கௌரவம் என்று சொல்வது சிறிதும் பொருந்தாது. நமது கோட்பாடுகளுக்கு, அரசியல் கொள்கைகளுக்கு மாறுபட்டவர்களுடனும் காமன்வெல்த் அமைப்பின்கீழ்நாம்இருக்கவேண்டியிருக்கிறது இதில் எந்த கௌரவமும்போனதாகத்தெரியவில்லை. நாள்தோறும், உலக அரங்கில் காமன்வெல்த் நாடுகள் சிலவற்றுடன் இந்தியாவுக்கு முரண்பாடான நிலைமைகள் உண்டாகின்றன. ஆனால் அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு, காமன்வெல்த்தில் இருக்கமுடிகிறது. அந்தத் தொடர்புகளைவைத்துக்கொள்வதில் குற்றமோ, கௌரவக் குறைவோ இல்லையென்றால், ஆங்கிலமொழித் தொடர்பை வைத்துக் கொள்வதிலும் குற்றமோ கௌரவக் குறைவோ இல்லை. காமன்வெல்த் அமைப்பில் இருக்கிறவரை, ஆங்கிலம் கூடாது என்பதற்குச் சரியான காரணங்கள் எதுவும் இவர்களுக்குக் கிடையாது. காமன்வெல்த் அமைப்பை விட்டுவிட்ட பிறகு வேண்டுமானால், ஆங்கிலம் வேண்டுமா வேண்டாமா என்று கேட்டுக் கொள்வதற்கான உரிமையை இவர்கள் பெறுகிறார்கள்.

இந்த மொழிப்பிரச்சினையில் நாம் போராட வேண்டும், கல்லையும் மண்ணையும் வீசியெறிந்தல்ல, உறுதியான மனதுடன், தெளிவான அறிவுடன், சரியான நம்பிக்கையுடன்! ஆங்கிலம் தொடர்ந்து இருக்கவேண்டுமென்பது, தெளிவான சரியான வேண்டுகோளாகும். தென்னிந்தியர்களுக்கு ஆங்கிலம் சுலபமாக வருகிற காரணத்தால், ஆங்கிலம் வேண்டுமென்கிறார்கள் என வடநாட்டுக்காரர்கள் பலர் நினைக்கிறார்கள். இதுசரியல்ல. அவர்கள் கூறுகிறபடியே ஆங்கிலம் சுலபமாக வருகிறபடியால் ஆங்கிலம் வேண்டும் என்று தென்னாட்டினர் சொன்னால், இந்தி எங்களுக்குச் சுலபமாகவருகிறது ஆக, இந்தி இருக்கட்டும் என அவர்கள் கூறுகிறார்களா? தென்னாட்டில் அப்படியொன்றும் ஆங்கிலப்பயிற்சி தரம் உயர்ந்து இல்லை. இப்பொழுது கல்லூரி மாணவர்கள் எழுதுகிற பரிட்சைத்தாள்களைப் பார்த்தாலே ஆங்கிலப் பயிற்சி எவ்வளவு குறைந்திருக்கிறது என்பது தெரியும். ஆங்கிலப் பயிற்சியில் இரண்டு பகுதியும் ஒரே அளவாகத்தானிருக்கின்றன. அவர்கள் எப்படிப் புதிதாகக்கற்றுக்கொள்கிறார்களோ அதைப் போலத்தான் நாமும் கற்றுக்கொள்ளவேண்டியிருக்கிறது. அவர்களைவிடநமக்குஅனுகூலமோ குறைபாடோ எதுவும் ஆங்கிலத்தை பொறுத்தவரை கிடையாது. இந்தியில் அவர்களுக்கு இருக்கிற அனுகூலம் நமக்குக் கிடையாது.

சற்று உணர்வுடன், சற்று உணர்ச்சியுடன் இந்தப்போராட்டத்தில் ஈடுபடவேண்டும், இல்லையானால் போராட்டம் கடுமையாகக்காட்சியளிக்கும்.நமது பிரதம மந்திரி எதையும் கேட்கும் பரந்த உள்ளப்பாங்கு உடையவர். ஆங்கிலத்தின நன்மைகளையும் நமக்குள்ள குறைபாடுகளையும் அவர்நன்கு உணர்வார். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் ஆங்கிலத்தினால் கிடைக்கக் கூடியவாய்ப்புகளையும் பலன்களையும் மற்றவர்களைவிட அவர் நன்கு தெரிந்துள்ளார்.

சிறிதுநாட்களுக்கு முன் என்னுடைய நண்பர்ஒருவர்,எனக்கு எழுதினார் "உலகத்தின் பல பகுதிகளிலும் ஒரு கோடியிலிருந்து மற்றொரு கோடி வரை உள்ள மக்களுடன் எல்லாம் தொடர்பு கொள்ள—அவர்களிடம் நம்மை அழைத்துச் செல்லும் நல்ல பாதையாக எந்த மொழி பயன்படுமோ அந்த மொழி மிகவும் வேண்டியது'. அவர் குறிப்பிட்ட குணங்களை உடையஒரேமொழி இப்போது ஆங்கிலம் ஆகும். அத்தகைய ஆங்கில மொழியை விட்டு, இந்த நாட்டில் ஒரு பகுதியில் இருக்கிற மொழியை எல்லாப் பகுதிகளிலும் கட்டாயப்படுத்துவது, இரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்தும் வியாதியைப்போல நாட்டுமுன்னேற்றத்தை தடைப்படுத்தும் வியாதியாகும். இந்தி அது பேசப்படுகிற ஓரிரண்டு மாநிலங்களில் மட்டும் பயன்படக் கூடியதாக இருக்கும். அதைக் கொண்டுபோய் இந்தியா முழுவதற்கும் பயன்படும்படி கட்டாயப்படுத்தினால், இரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்தி உயிரை மாய்ப்பதுபோன்று இருக்கிறது.

இந்தியைத் திணிக்க வேண்டாமென்றுவடநாட்டிலிருக்கும் என் நண்பர்களைக் கேட்டுக் கொள்கிறேன் பகற்கனவுகளைக் கண்டு வீண் முயற்சிகளில் ஈடுபடாமல் எல்லாப் பகுதிகளிலும் எல்லாத் துறைகளிலும் ஜனநாயகம் வளர அவர்கள் அனுமதிக்க வேண்டும்!

நமக்கு பிடிக்காத ஒன்றை நம்மீது திணிக்கப்படுவதை அனுமதிக்கமாட்டோம் என்பதை நாம் நன்றாக உணர்ந்து தெரிவித்துவிட வேண்டும்!

**நாம் அனைவரும் ஒன்றுபட்டு இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராடுவோமாக!**

## நமது கட்சி!

"தேங்காயை தேவாலயத்துக்கு எடுத்துச்சென்று உடைத்து அர்ச்சனை செய்யச் சொல்லி, ஒரு மூடியை அர்ச்சகருக்குக் கொடுத்துவிட்டு, இன்னொரு மூடியை வீட்டிற்குக் கொண்டு செல்பவர்களும் உண்டு.

"இன்னும் சிலர் வீட்டு விசேடத்தின்போது, 'திருஷ்டி' கழிப்பதாகக் கூறி, நடுவீதியில்—சூறைக்காய் உடைப்பதுபோல—உடைப்பார்கள்; அதைப் பொறுக்கச் செல்பவர்களில், சாமர்த்தியம் உள்ளவனுக்கு நல்ல தேங்காய் கிடைக்கும்; மற்றவர்களுக்கு வெறும் ஓடுதான் கிடைக்கும்.

"இன்னொரு விதமும் உண்டு; தேங்காயைத் தாய்மார்களிடம் கொடுத்தால், அதை உடைத்துப் பதமாகத் திருகி, எந்தப் பண்டத்திலே சேர்த்தால் இனிப்போடு சுவை தரும் என்பதறிந்து, பக்குவமாகச் சேர்த்துப் படைப்பார்கள்.

"கட்சிகளும் அப்படித்தான்; பயன்படுத்துகிற விதத்தையொட்டித்தான் பலனும் இருக்கும்.

"மூன்றாவது சொன்னேனே, அந்த விதத்தைச் சேர்ந்ததுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

"சில கட்சிகள், தங்களுக்கிருக்கும் செல்வாக்கை 'சூறைக்காய்' உடைக்கிறதைப் போலப் பயன்படுத்தி வருகின்றன; உடைக்கும்போது சிலருக்கு மண்டைகளும் உடைகின்றன; சாமர்த்திய முள்ளவனுக்குத் தேங்காய் கிடைக்கிறது; நோஞ்சலாயுள்ளவன் ஓட்டை எடுத்துக் கொண்டு போகிறான்.

"திராவிட முன்னேற்றக் கழகம், தன் செல்வாக்கை அவ்வப்பொழுது பலப் பரீட்சை நடத்தாமல், பலாத்காரத்தில் இறங்காமல், ஒருவரோடு இன்னொருவர் மோதிக்கொள்ள உதவாமல் பயன்படுத்த வேண்டும். வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்க்க வலிவைத் திரட்டுவது தான் நம் வேலையாக இருக்கவேண்டும். அதை விடுத்து, இருக்கின்ற வலிவைச் சிதறடித்து, சின்னாபின்னமாக்கி ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டால், அந்த சாக்கைப் பயன்படுத்திக்கொள்ள எண்ணியிருக்கிறார்கள் சிலர்.

"வலிமையை எந்தப் பெரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்த வேண்டுமோ அதற்குப் பயன் படுத்த வேண்டும். தி. மு. கழகம் தன் வலிமையைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும். சமயம் வரும்போது இதைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறமாட்டோம்; ஆனால் 'சூறைக்காயாக'வும் ஆக்கிவிட மாட்டோம்."

—கொருக்குப்பேட்டைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளவும் உலக முதன் மொழியாக இருப்பது ஆங்கிலமே! இந்தியாவில் தற்பொழுது எல்லாத்துறைகளிலும் ஆங்கிலம் நல்ல பயன் அளித்து வருகிறது. ஆங்கிலத்தை அப்புறப்படுத்துவது இருக்கிற நலனை இழந்து விடுவதாகும்!

### ஒற்றுமைத் திட்டமா?

பலதிறப்பட்ட பிணைப்புகளிலிருந்துதான் தேசிய ஒற்றுமை என்பது ஏற்படுகிறது. ஒரே மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் கூட்டத்துக்கு தேசிய ஒற்றுமை என்ற உணர்வு இருக்கலாம். ஆனால் தேசிய ஒற்றுமை என்பதற்கு ஒரே மொழி தாய்மொழியாக ஆக்கப்பட்டால்மட்டும் போதாது. அதிலும விரும்பாத மக்கள் மீது அதிகாரபலத்தின் துணை கொண்டு கட்டாயமாகத்திணிப்பது, அந்தச் செய்கைக்கு எவ்வளவுதான் காரணங்கள் காட்டப்பட்டபோதிலும், தேசிய ஒற்றுமையல்ல, இருக்கின்ற வேற்றுமைகளை நிச்சயமாக அது கிளறி விரிவுபடுத்துவதாக முடியும். இந்தக் காரணத்தினால்தான், பஞ்சாபிய மொழியும் வங்காள மொழியும் இந்தியுடன் பலவிதத்தில் ஒன்றுபட்டிருந்தபோதிலும், பஞ்சாபிலும் வங்காளத்திலும், இந்திக்கு கடுமையான எதிர்ப்பு வந்துள்ளது. சுவிட்சர்லாந்து போன்ற சிறு நாடுகளிலும், கானடா போன்ற பெருநாடுகளிலும் இரண்டு, மூன்று மொழிகள் அரசாங்க மொழிகளாக இருந்தபோதிலும், அங்குள்ள ஒற்றுமை அவற்றால் பாதிக்கப்படவில்லை.

### ஜனநாயகப் பண்பு

நாட்டின் பெரும் பகுதிகள் பாதிக்கப்படுகையில், அதனால் ஏற்படும் தீங்குகள் அரசாங்கத்துக்குத் தெளிவாக்கபபட்ட பின்னும், "பார்லிமெண்டில் பெரும்பான்மை ஓட்டு' என்ற குறுகிய முறையில், அந்தப் பிரச்சினைக்கு முடிவு காணக்கூடாது. அது ஜனநாயக அடிப்படைத் தத்துவக்கே முரணபாடானது. பெரும்பான்மை பலத்தை அக்கிரமமான முறையில்உபயோகிப்பது ஜனநாயகமாகாது. ஜனநாயத்தில் சிறுபான்மையினர்க்கும் தக்கப் பாதுகாப்புகள் இருக்கும்!

மேலும்இந்தியை எதிர்ப்பவர்கள் சிறுபான்மையினர் என்ற தவறான கருத்து நிலவுகிறது. இந்தியை விரும்புகிறவர்களும் விரும்பாதவர்களும் நாடு முழுவதிலும் கலந்து காணப்படவில்லை.

அரசாங்கக் கொள்கையை தென்னகம் முழுவதும் எதிர்க்கிறது. சிறுபான்மையா, பெரும்பான்மையா எனக் கணக்குப் போட்டுப் பார்ப்பதல்ல இது. ஒரு நாட்டின் ஒரு பகுதி முழுவதும் காட்டும் ஒன்றுபட்ட எதிர்ப்பு என்பதை உணரவேண்டும்.

### அரசியல் சட்டம்

அரசியல் சட்டம் வற்புறுத்துகிறது எனக் காட்டும் காரணம் ஒப்புக்கொள்ளக்கூடியதாக இல்லை. அரசாங்கத்துக்குப் பிடிக்காத அரசியல் சட்டப்பிரிவுகள் பல, ஆண்டுதோறும் திருத்தப்படுவதைப் பார்க்கிறோம். அரசியல் சட்டம் வகுக்கப்பட்ட நேரத்தில் வெள்ளையர்களுக்கு எதிரான வெறுப்புணர்ச்சி இருந்தது. காங்கிரசு கட்சிக்கூட்டத்திலும்இந்தியை அரசாங்க மொழியாகக் கொண்டுவரும் தீர்மானம் இரண்டு முறை நிறைவேற்ற முடியாமல் போய் மூன்றாவது தடவை அதிலும் ஒரு ஓட்டு அதிகத்தினால், நிறைவேற்றப்பட்டதாகத் தெரிகிறது. "மூன்றில் இருபகுதி பெரும்பான்மை வேண்டும்" என்ற அரசியல் சட்டகோட்பாட்டை வைத்துப் பார்த்தால் அந்தச் சட்டத்தில் மொழிபற்றிய விதியைநிறைவேற்றியிருக்கவே முடியாது. காங்சிரசுக் கட்சிக் கூட்டத்தில் ஏற்பட்ட சமபலம் நாட்டில் இந்தி வேண்டுமென்பதற்கும் வேண்டாமென்பதற்கும் உள்ள சமபவத்தைப் பிரதிபலிப்பதாகும்.

### இந்திக்குக் கெடுநாள்

இந்தி அமுலாக்கப்படும் நாளை ஒத்திப்போடும்படிக் கூறுபவர்கள்கூட, அதே காரணங்களுக்காக அதை ஆதரிக்வில்லை. எப்படியாவது இந்தக் கேடு ஒத்திப்போடப் பட்டால் போதும் எனச் சிலர் நினைக்கின்றனர். இப்போது ஒத்திப்போடப்பட்டால் பின் அதைக் கைவிட்டு வீடலாம் எனச் சிலர்நினைக்கிறார்கள். இன்னும் சிறிது காலம் சென்றால், இந்தி வளர்ந்து அரசாங்க மொழியாவற்குரிய தகுதியை அடைந்து விடுமென நினைக்கிறார்கள். இன்னும் சிலர் இந்தி தெரியாதவர்கள் இந்தியைக் கற்றுக் கொள்ள அவகாசம் தரலாமே என நினைக்கின்றனர். இவ்வாறு குழப்பமான ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட காரணங்களுடன் பேசுகையில், "இப்பொழுதுள்ள அரசாங்க மொழியை மாற்றுவதற்குத் தகுந்த காரணங்கள் இருக்கின்றனவா?" என்ற முக்கியமான கேள்வியை மறந்து விடுகிறார்கள்.

### தென்னாட்டின் சார்பாக

நீதி, நேர்மை இவற்றின் அடிப்படையில் தென்னாட்டு மக்கள் இந்தியை எதிர்க்கிறார்கள். ஆங்கிலத்தை ஆட்சி மொழியிலிருந்து நீக்கிவிடுவதால் பலன் எதுவுமில்லை என்று நம்புகிறார்கள். இவை இரண்டும் தெளிவாக எங்களுக்குத் தெரிகிற காரணத்தால், தென்னாட்டு மக்கள் சார்பாக இதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்: ஒற்றுமைக் காப்பாற்றப்பட வேண்டுமென்றால், பிரிந்து செல்ல வேண்டுமென்ற வேட்கையைத் தணிக்க வேண்டுமென்றால், இந்தி மொழியைப் புகுத்தும் திட்டத்தை அரசாங்கம் உடனடியாகக் கைவிட வேண்டும்.

"மத்திய அரசாங்கத்தால் தென்னாடு புறக்கணிக்கப் படுகிறது" என்ற எண்ணம் இங்கு நிலவுகிறது. இது சரியா, தவறா என்பதை இங்கு ஆராய வேண்டாம். ஆனால், இந்தியாவின் மற்ற பகுதிகளின்மீது இந்தி பேசுபவர்கள் ஆதிக்கஞ் செலுத்த வழி கோலுவது, அந்த எண்ணத்தை வலுப்படுத்துவதாகும். இதைப் போன்ற அரசியல் தவறு—அரசியல் அறிவீனம் வேறெதுவும் இருக்க முடியாது. இந்தியைப் புகுத்தும் திட்டத்தைக் கைவிடுவதால், இந்திப் பிரியர்களுக்கு முதலில் அது ஏமாற்றமாக இருக்கலாம. அந்த முதல் ஏமாற்றத்தைச் சமாளித்துக் கொண்டு, மற்றவர்களுடைய மனோபாவத்தையும் அறிந்து, ஒற்றுமைக்கானச் சூழ்நிலையை அமைக்கவேண்டும்.

### பிரதம மந்திரிக்கு

அரசாங்க மொழிப் பிரச்சினையில், பல்வேறு மாநிலத்திலிருக்கும் வெவ்வேறு கூட்டத்தினர்கள் ஒவ்வொரு கொள்கையைக் கொண்டிருக்கின்றனர். உணர்ச்சி வேகமுள்ள, மாறுபட்ட கருத்துக்கள் ஒன்றோடொன்று அலைமோதிடும் இந்த நெருக்கடியான சூழ்நிலையில், பிரதம மந்திரி ஒருவரால் மட்டுமே வேற்றுமைகளை அகற்றி, பாரபட்சமற்ற நிலையில் அமைதியை நிலைநாட்ட முடியும். ஆகவே இதில் தலையிட்டு, பிரச்சினை முழுவதையும் திரும்பச் சீர்தூக்கிப் பார்க்குமாறு அவரை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இன்றேல், தங்கள் மொழிமீது சிலருக்கு ஏற்பட்டுள்ள அளவுக்குமீறிய ஆர்வத்திற்கு, உண்மையான சுதந்தர உணர்ச்சி பலியிடப்படும் நிலை ஏற்படும்! ●

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுக்கொண்ட மக்களுக்கே அதிகத் துன்பங்கள் உண்டாகும்! ஆதிக்க வெறியுடன் கிளம்பினால் முதலில் நல்ல ஆர்வமிருக்கும், காட்டுகிற ஆவேசத்துக்குப் பலன்கூடக் கிடைக்கும். ஒருசிலர் அடங்கிப் போவதைப் பார்த்து, "ஆகா! நம்மை மிஞ்சியவர்கள் யாரும் கிடையாது!" என்ற ஆணவம் உண்டாகும். சிலகாலம் கழித்து ஆதிக்கத்துக்கு அடிபணிய மறுப்பவர்கள் கிளம்புவார்கள், ஆணவத்திற்கு எதிர்ப்பு கிளம்பும், எவ்வளவு விரைவில் ஆதிக்கம் வளர்ந்ததோ அவ்வளவு விரைவில் அழிவு காலம் அதனை நாற்புறத்திலும் சூழும்!

இந்தியா முழுமையும்அடக்கி ஆளமுடியும் என்ற ஆதிக்க நினைவு இந்தி மொழிக்காரர்களுக்குத் தரப்படுகிறது. அவர்களுக்கு உற்சாகமாக இருக்கிறது. இந்தியைப் பரப்புவதில் மிகுந்த ஆவேசத்தைக் காட்டுகிறார்கள். சில பல இடங்களில் இந்தி பரவுவது அவர்களுக்கு நம்பிக்கையையும் தருகிறது. இந்தியா முழுவதையும இந்திமயமாக்கிவிடுவது என்றஆணவப் போக்கில் துடிப்புடன் இருக்கிறார்கள். ஆனால் அந்த ஆதிக்க நினைவும், ஆணவப் போக்கும், மற்ற மொழியினர்களைவிட இந்தி மொழியினர்க்குத்தான் அதிகச் சங்கடங்களைத் தரப்போகிறது! நாசிச வெறியை ஏற்றுக்கொண்ட ஜெர்மனி அதற்கு ஒரு நல்ல உதாரணம்! ஜெர்மானியர்கள் ஐரோப்பா முழுவதையும் ஆளத்தகுந்தவர்கள், ஆளக்கூடியவர்கள் என்ற ஆதிக்க நினைவு இட்லரால்தரப்பட்டது. இது முதலில் ஜெர்மானியர்களுக்கு இனிப்பாகத்தான் இருந்தது, அவர்களுடைய உற்சாகத்தையும் ஆவேசத்தையும் தூண்டுவதாக அமைந்தது மற்றவர்களை அடக்கியாள முற்பட்டார்கள். முதலில் வெற்றிகள் கிடைத்தன! ஆனால்... கடைசியாக அவர்களுக்கு எதிர்ப்பு கிளம்பி, ஆதிக்கம் அழிந்து, ஆணவம் குலைந்து, மற்றெல்லா நாடுகளையும் விட சின்னா பின்னமடைந்து; சிறப்புகளெல்லாம் இருந்த இடம் தெரியாமல் சிதறடிக்கப்பட்டு, உற்சாகம் கொப்பளித்த இடத்தில் சோக இருள் கப்பிக்கொள்ளவும், ஆவேசக்குரல் அதிர்ந்த இடத்தில் அழுகுரல்கள் மிஞ்சவுமான நிலை ஏற்பட்டது! ஐரோப்பா முழுவதையும் ஆளக்கூடியவர்கள் என்று ஜெர்மானியர்களுக்குத் தரப்பட்ட ஆதிக்கவெறி அவர்களையே அழித்துவிட்டதைப்போல, இந்தியா முழுவதையும் அடக்கியாளமுடியும் என்று இந்தி மொழியினர்க்குத் தரப்படும் ஆதிக்கவெறி அவர்களுக்கே ஆபாத்தாக முடியும்! உங்கள் நன்மையின் பொருட்டே பார்த்தாலும். இந்த ஆதிக்க நினைவு உங்களுக்கு நல்லதல்ல என வடநாட்டினருக்கு நாம் தெரிவித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது.

நீதியின் பேரால், நேர்மையின் பேரால், அமைதியின் பேரால், ஜனநாயகப் பண்பின் பேரால், தென்னாட்டுப் பிரமுகர்கள் அனுப்பியுள்ள திருமுகத்துக்கு மதிப்புத்தந்து செய்யவிருக்கும் தவறை திருத்திக் கொள்ளுங்கள் எனப் பண்டித நேருவைக் கேட்டுக்கொள்கிறோம்! அமைதியை நிலைநாட்ட, ஜனநாயகப் பண்பைப் பாதுகாக்க இதுதான் அவருக்குக் கிடைத்துள்ள கடைசிச் சந்தர்ப்பம்!

பண்டித நேருவே! பாருக்கெல்லாம் பஞ்சசீலத்தை உபதேசிக்கும் பிரதமரே! நீங்கள் வாழும் துணைக்கண்டத்தில் பஞ்சசீலம் பரவ, தென்னாட்டினராகிய நாங்கள் உரிமையுடன் வாழ, அனுமதியுங்கள் எனக் கேட்டுக்கொள்கிறோம்! ●

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கீழ் கவிழ்த்து, பையை உதறிக் காட்டுவதுபோல ஒரு பத்திரிக்கை படம் போட்டது! நல்ல உடையுடன் அலங்காரமாகச் சென்றவர், கிழிந்த சட்டையுடன் அலங்கோலமாகத் திரும்புவதுபோல மற்றொரு கேலிச் சித்திரம் பத்திரிக்கையில் வந்தது!

"ஆனந்தவிகடன்" பத்திரிக்கை அமெரிக்காவிலிருந்து திரும்பிய டி. டி. கிருஷ்ணமாச்சாரிக்கு பெரிய பட்டை நாமத்தைப் போட்டு, கேலிச் சித்திரம் வரைந்திருக்கிறது!

இது போல கேலிச்சித்திரம் வரையாவிட்டாலும், அந்தச் சித்திரத்துக்கேற்ற பாட்டு ஒன்று நாமே போடலாம்!

**தட்டைக் கிருஷ்ணனும்**
**தட்டேந்தி போனன்!**
**தட்டைக் கிருஷ்ணனுக்கு**
**பட்டை நாமம் விழுந்தது!**

மானத்தை விட்டு, மரியாதையை விட்டு எவ்வளவோ கெஞ்சிக் கடன் கேட்டார். அந்தப் பொல்லாத அமெரிக்கர்கள் சல்லிக்காசு கூடக் கொடுக்காமல் அனுப்பி விட்டார்களே!

**மண்டியிட்டார், தண்டனிட்டார்**
**மண்மேலே புரண்டுகேட்டார்,**
**மாபாவி அமெரிக்கர்கள்**
**நாய்க்காசும் போடலியே!**

பணம் தேடப்போன இடத்தில் பட்டை நாமம் விழுந்தது கேலியாக இருந்தாலும், இப்படி இவரை அவமானப்படுத்தி அனுப்பிய அமெரிக்கர்களை நினைக்கும் பொழுது கோபமாகத்தான் இருக்கிறது.

**கடன் கேட்ட இடத்தில்**
**கட்டையிலே போறவன்**
**பட்டை நாமம் போட்டு**
**வந்தவழி திருப்பிட்டான்!**

கிருஷ்ணமாச்சாரியார் சாதாரணமாக ஒரே நாமம் போடுகிறவர்! ஒரே நாமம் என்றால் மற்றவர்களுக்கு ஒரே அடியார்க்க நாமம் போடுகிறவர் என்று அர்த்தம் செய்து கொள்ளாதீர்கள். இந்த இடத்தில் அந்த மாதிரி அர்த்தம் இல்லை 'ஒரே நாமம்' என்றால், மத்தியில் இருக்கிற ஒற்றை நாமம் மட்டும் போடுவது வழக்கம். அமெரிக்கா போய்வரும் போது "ஆனந்த விகடன்" சித்திரப்படி பட்டை நாமம் போடப்பட்டுவிட்டது! அதை நினைத்தாலும் நமக்கு என்னவோ போலிருக்கிறது.

**ஒத்தை நாமத்துடன்**
**ஊர்போன கிச்சாமி**
**பட்டை நாமத்துடன்**
**பறந்தோடி வந்தானே!**

கனம் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அமெரிக்கா போய், பட்டை நாமத்துடன் திரும்பிய கதையை நினைத்தால், இது போல் ஏராளமான நாடோடிப் பாடல்கள் போடலாம்! கேலிச் சித்திரங்கள் கணக்கில்லாமல் வரையலாம்! அவ்வளவு பிரமாதமான முறையில், மாபெரும் தோல்வி கிடைத்திருக்கிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்ற எழுநூறு கோடி ரூபாய் தேவைப் பட்டது! அந்த எழுநூறுகோடி ரூபாயைக் கடன் கேட்டோ காலில் விழுந்தோ வாங்குவதற்குத்தான் நிதி மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அமெரிக்காவுக்குப் பறந்து சென்றார்! இவர் வருகிறார் என்பதற்காக முதலில் வழிவிலக்கி வைக்க பிர்லா தலைமையில் பெரும் முதலாளிகளின் கூட்டம் அமெரிக்காவில் முகாம் போட்டு, இந்தியாவின் தேவைகளை விளக்கினார்கள்! டி. டி. கே சென்றதும் அமெரிக்கக் குடியரசுத் தலைவரையும், முக்கிய அரசியல் கட்சிக்காரர்களையும் கோடீசுவரர்களையும் தொழிலதிபர்களையும் தனித்தனியாக சந்தித்துக் கேட்டார். எவ்வளவோ பாடுபட்டும், உதவிதராவிட்டால் நேரக்கூடிய ஆபத்துக்களையெல்லாம் படம் பிடித்துக்காட்டியும் எதுவும் கிடைக்கவில்லை! சென்று வந்த சிலவுக்குக்கூட பணம் கிடைக்கவில்லை! இந்தியாவின் தேவைகளைப் பற்றி எவ்வளவோ சொல்லியும், நிதிமந்திரி நேரில் சென்று உருக்கமாகப் பிரார்த்தனை செலுத்தியும், பிர்லா போன்ற பூசாரிகள் உடுக்கடித்துவேண்டியும், அந்த டாலர் தேவதைக்கு மனமிளகவில்லை!

700 கோடி ரூபாய் இரண்டாவது திட்டத்துக்குத் தேவைப்படுகிறது. இவர்கள் எதிர்பார்த்தபடி—கனவுகண்டபடி வெளிநாட்டிலிருந்து எதுவும் கிடைக்கும்போல் தோன்றவில்லை! அமெரிக்காவுக்குப் போய், ஜப்பானுக்குப் போய், ஐரோப்பாவெல்லாம் சுற்றியலைந்து திரும்பிவிட்டார்கள்! ஆப்பிரிக்கா கண்டத்து காங்கோ நாட்டினரிடமும் ஆர்க்டிக் வட்டத்திலிருக்கும் எஸ்கிமோ மக்களிடமும் கடன் கேட்காததுதான் பாக்கி, மற்ற எல்லா நாடுகளிடமும் இந்தியா கடன் கேட்டாகி விட்டது!

பணத்தை எப்படிச் சேர்ப்பது என்பதற்கு வழி வகுத்துக்கொள்ளாமல், 4800 கோடி ரூபாய் திட்டங்கள் போட்டுவிட்டார்கள். வெளி நாட்டு உதவி கிடைக்கவில்லை என்றதும், போட்ட திட்டங்களை எப்படி நிறைவேற்றுவது என்பது தெரியாமல் விழிக்கிறார்கள்.

திட்டத்தைப் போடும் பொழுது "திட்டப்பிரமாக்கள்" யோசித்திருக்க வேண்டாமா? "இப்படி4800 கோடிரூபாய்க்குப் பெரிய திட்டத்தைப் போட்டுவிட்டோமே, இவ்வளவு பணத்துக்கு என்ன வழி" என்று!

திட்டத்தைப் போடும் பொழுதே, "வெளிநாட்டுஉதவி 800 கோடி ரூபாய்" என்று தங்கள் கையிலிருந்த புத்தகத்தில் குறித்து வைத்துக்கொண்டார்கள். இப்பொழுது இவர்கள் எதிர்பார்த்ததில் பத்தில் ஒரு பங்குகூடக் கிடைக்கவில்லை.

வெளிநாட்டு உதவி கிடைக்காதது மட்டுமல்ல, உள்நாட்டில் விலைவாசி உயர்வுகள் திட்டத்தைப் பாதித்துள்ளன. இவர்கள் 4800 கோடி ரூபாயில் போட்ட திட்டம், இப்பொழுதுள்ள விலை வாசி உயர்வுகளில் 5500, கோடி ரூபாய்க்கு உயர்ந்துவிட்டது!

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை அப்படியே நிறைவேற்றுவதென்பது முடியாத காரியம். போட்ட கணக்கை விட அதிகமான பணம் தேவைப்படுகிறது என்றதும், "திட்டத்தின் முழு அளவையும் நிறைவேற்ற முடியாது. அதில் முக்கியமாக உள்ளவைகளை மட்டும் நிறைவேற்றப் போகிறோம்" என்று தெரிவித்தார்கள். இப்பொழுது அமெரிக்கா போய்விட்டுத் திரும்பியதும், "திட்டத்திலுள்ள முக்கியமான அம்சங்களைக் கூடநிறைவேற்றப் பணம் கிடைக்காது போலிருக்கிறது. ஆக முக்கியமான அம்சங்களைக்கூடக் குறைக்க வேண்டிவரும்" என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

"திட்டத்தில் உள்ள முக்கியமான அம்சங்களை மட்டும் நிறைவேற்றப் போகிறோம்" என்று இவர்கள் கூறுவதில் ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். திட்ட முக்கிய அம்சங்கள் என்று கூறப்படுபவையெல்லாம் வடநாட்டில் இருக்கின்றன.

ஆரம்பிக்கப்பட்டுள்ள பெரும் அணைக்கட்டுகள்—அவையெல்லாம் வடநாட்டில் இருக்கின்றன. மின்சார உற்பத்தி, நீர்ப்பாசனத்திட்டங்கள் ஐந்தாண்டுத்திட்டத்தில் முக்கிய அம்சங்களாகும். அவையெல்லாம் வடநாட்டில் இருக்கின்றன.

இரும்பு—எஃகு உற்பத்தி ஐந்தாண்டுத் திட்டத்தில் முக்கிய அம்சங்கள், இரும்பு—எஃகு உற்பத்திசாலை பிரமாண்டமான அளவில் கோடிக்கணக்கான ரூபாய் செலவில், பிலாய், துர்காபூர், ரூர்கேலா ஆகியஇடங்களில் ஆரம்பிக்கப்படுகின்றன, இவை திட்டத்தின் முக்கிய அம்சங்கள், இவையெல்லாம் வடநாட்டில் இருக்கின்றன!

திட்டத்தின் முக்கிய அம்சங்களை மட்டும் நிறைவேற்றப் போகிறோம் என்று கூறும் பொழுது, வடநாட்டுத் திட்டங்களுக்குத் தகுந்த பாதுகாப்புத் தரப்பட்டுவிடுகின்றன! பணம் இல்லை என்ற காரணத்தால் தென்னாட்டுக்குத் தரப்பட்டச் சிறுசிறு திட்டங்களும் கை விடப்படலாம்!

பெரிய திட்டங்களைப் போட்டார்கள் அவற்றை எப்படி நிறைவேற்றுவது என்றுவிழிக்கிறார்கள். ஆண்டிகள் கூடி மடங்கட்டியதுபோல, ஏதோ திட்டங்களைப் போட்டு இப்பொழுது பண்டாரங்கள்போல தட்டையேந்திக் கொண்டு அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும், ஜப்பானுக்கும், செர்மனிக்கும், "பகவதி பிட்சாந் தேகி" என்று போய்க் சொண்டிருக்கிறார்கள். இதில் அமெரிக்காவுக்குப் போன பண்டாரம் நல்ல பட்டையான நாமத்துடன் திரும்பி வந்தார்!

ஐந்தாண்டுத்திட்டத்தில் மற்ற தொழிற்சாலைகளுடன் சேர்த்து, இன்னொரு தொழிற்சாலையையும் உண்டாக்கவேண்டும். சிகப்புச் சூர்ணமும், வெள்ளைக்கட்டியும்தயாரிக்க ஏற்பாடு செய்தால், அதற்காவது கடன் வாங்காமல், மந்திரிகளும் ஒருவருக்கொருவர் பெரிய பட்டை நாமங்களைப்போட்டுக்கொண்டு கையில் தம்பூராவை மீட்டிக்கொண்டு, பஜனைப் பாட்டுப் பாடி, கதா காலட்சேபம் செய்து கொண்டிருக்கலாம்!

—இரா. செழியன்


### மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

| | | |
|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. 15·00 |
| ஓராண்டு | ... | ரூ. 8·00 |
| ஆறுமாதம் | ... | ரூ. 4·00 |
| தனி இதழ் | ... | 16 காசு |

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பீயில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

| | | |
|---|---|---|
| இரண்டாண்டு | ... | ரூ. 18·75 |
| ஓராண்டு | ... | ரூ. 10·00 |

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

| | | |
|---|---|---|
| தனி இதழ் | ... | 20 காசு |


"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலைபேசி எண்: 5569